பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | தை 08 | வியாழக்கிழமை | (22-01-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 34






# ஸ்ரீ.சு.கட்சி-ஜே.வி.பி.கூட்டு யுத்தத்திற்கே வழி கோலும்

## அன்ரன் பாலசிங்கம் கருத்து



(நமது நிருபர்)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணி(ஜே.வி.பி)க்குமிடையே தற்போது ஏற்பட்டுள்ள கூட்டு முன்னணியானது மீண்டுமொரு யுத்தத்திற்கு நாட்டை இட்டுச் செல்லும். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எச்சரித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி)க்குமிடையில் கூட்டு முன்னணி உடன்படிக்கை கைச்சாத்தான பின் அது தொடர்பாக கருத்துத் தெரிவித்த போதே கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

இக்கூட்டு முன்னணி அமைக்கப்பட்டது தொடர்பாக 'தமிழ் நெற்' இணையத் தளத்திற்கு அன்ரன் பாலசிங்கம் பேட்டியளித்திருந்தார். அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக இந்த இரண்டு கட்சிகளுக்குமிடையே பாரிய கருத்து (12ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் அனுசரணையில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது

### ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கருத்து

(கொழும்பு)

அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்கும்இடையில் ஏற்படுத்தப்பட்ட சமாதான முயற்சிகளில் நோர்வேயின் அனுசரனையில் அதிருப்தி இருப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்தால் நோர்வேயின் மத்தியஸ்தம் குறித்து மறுபரிசீலனை செய்யப்படுமென அக்கட்சி கூறியுள்ளது.

இலங்கையின் சமாதான முயற்சிகளின் நடைமுறைகள் முற்று முழுதாக சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளதாக அக்கட்சி கருத்து தெரிவித்துள்ளது.

நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை எனவும் புதிய கூட்டணி கூறியுள்ளது. (ச)

## மீண்டுமொரு யுத்தத்தை அரசு ஆரம்பிக்கமாட்டாது

### யாழ்.தளபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசாங்கம் மீண்டும் ஒரு யுத்தத்தை இனிஒருபோதும் ஆரம்பிக்கப்போவதில்லை என யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால தெரிவித்துள்ளார்.

வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக வலி-வடக்குப் பிரதேச செயயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் மீளக்குடியமர்வது தொடர்பாக வலிவடக்கு பிரதேச செயலாளர் க.குணராசா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இராணுவத் தளபதி மேலும் தெரிவிக்கையில,

இந்நாட்டில் நீண்டகாலமாக தீர்த்துவைக்கப்படாத இனப் பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காணமுடியாது. அதேபோல இந்நாட்டை இரண்டாகத் துண்டாடவும் முடியாது. இந்த இரண்டு விடயங்களும் ஒருபோதும் நடைபெறமுடி

## யாழ்.தளபதிக்கு கொலை மிரட்டல் விடுதலைப் புலிகள் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)


யாழ்.மாவட்டத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை விடுதலைப்புலிகள் முற்

துறை துணைப் பொறுப்பாளர் தனக்கு கொலைமிரட்டல் விடுத்ததாக இராணுவத்தளபதி போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

இம் முறைப்பாடு தொடர்பாக

## நடிகர் மணிவண்ணன் நேற்று யாழ்.வந்தார்

### ரசிகர்களுடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

தென்னிந்தியத் திரைப்பட நடி

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த மணிவண்ணன் நேற்று மாலை ரிலகோ


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை விடுதலைப்புலிகள் முற்றாக நிராகரித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் தனக்கு கொலைமிரட்டல் விடுத்ததாக இராணுவத்தளபதி போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

இம் முறைப்பாடு தொடர்பாக கண்காணிப்புக்குழுத் தலைவர்
(12ஆம் பக்கம் பார்க்க)

தாததுவைககபபடாத இனப் பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காணமுடியாது. அதேபோல இந்நாட்டை இரண்டாகத் துண்டாடவும் முடியாது. இந்த இரண்டு விடயங்களும் ஒருபோதும் நடைபெறமுடியாதவையாகும்.
(12ஆம் பக்கம் பார்க்க)



(யாழ்ப்பாணம்)

தென்னிந்தியத் திரைப்பட நடிகர் மணிவண்ணன் நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த மணிவண்ணன் நேற்று மாலை ரிலகோ விடுதியில் பத்திரிகையாளர்கள் மற்றும் சினிமா ரசிகர்களுடன் கலந்துரையாடினார்.

ரசிகர்களின் கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார். இதன் போது தான் தயாரிக்கவுள்ள திரைப்படத்தில் குடாநாட்டு மக்களின் வாழ்
(12ஆம் பக்கம் பார்க்க)

# மட்டு.மாவட்டத்தில் நேற்று எழுச்சிமிகு பொங்கு தமிழ்!

## பல்லாயிரக் கணக்கான மக்கள் பங்கேற்பு



(மட்டக்களப்பு)

'புலிகளே தமிழர் தமிழரே புலிகள்' என்ற கோட்பாட்டை வலியுறுத்தும் பொங்குதமிழ் நிகழ்வு கிழக்கிலங்கை பல்கலைக்கழக முன்றலில் அமைக்கப்பட்ட பிரமாண்டமான மேடையில் நேற்று எழுச்சி பூர்வமாக இடம் பெற்றது.

கிழக்கிலங்கை பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் பல்வேறு பொது அமைப்புக்களின் அனுசரனையுடன் இடம்பெற்ற இந்த பொங்குதமிழ் நிகழ்வில் மாணவர்கள் பொது மக்கள் என 75 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பங்கு கொண்டு தமது உணர்வலைகளை வெளிப்படுத்தினர்.

இந்நிகழ்வை ஒட்டி மட்டக்களப்பு நகர் விழாக்கோலம் பூண்டு இருந்தது. வீதியெங்கும் மஞ்சல் சிவப்பு நிறக்கொடிகள் பறக்கவிடப்பட்டு எழுச்சி கீதங்கள் இசைக்கப்பட்டன.

பாடசாலைகள், அரச, அரசசார் பற்றநிறுவனங்கள், சந்தைகள் என்பனவும் இயங்கவில்லை. அத்துடன் போக்குவரத்தும் இடம்பெறவில்லை.

முன்னதாக திருக்கோவில், வாகரை, காந்திநகர் சதுக்கம், வாழைச்சேனை, கொக் கட்டிச்சோலை, கரடியனாறு ஆகிய இடங்களில் இருந்து புறப்பட்ட வாகனப் பேரணி 10.30 மணியளவில் பொங்குதமிழ் நிகழ்விடத்தை அடைந்தன.மேற்படி நிகழ்வில் அமைச்சர்
(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பான் தூதுவர் அகாஷி இன்று வன்னி செல்கிறார்

(கிளிநொச்சி)

ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி இன்று கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

இவருடன் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகிம்சூடா உட்பட ஐந்து போர் வன்னிக்குச் செல்லவுள்ளனர்.

இச் சந்திப்பின் போது ஜப்பான் நிறுவனங்களினால் வன்னியில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதுடன் அத்திட்டங்களை அகாஷி பார்வையிடவுள்ளார்.

இதேவேளை கொழும்பில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு குறித்தும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் எதிர்காலம் குறித்தும் சந்திப்பல் கலந்துரையாடப்படவுள்ளது.(ச)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிறைச்சாலை ஆணையாளருக்கு அடிக்கடி கொலை மிரட்டல்

## பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு

(கொழும்பு)

இனம் தெரியாதோரால் தனக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ்மா அதிபரிடம் சிறைச்சாலை ஆணையாளர் முறைப்பாடு செய்துள்ளார்.

அண்மைக்காலமாக சிறைச்சாலை ஆணையாளரான புறூம்மர்சூத்தின் பணிப்புரையின் பேரில் சிறைச்சாலைகளில் கடுமையாக ஒழுக்க விதிகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

இப்பணிப்புரைகளால் பாதிக்கப்பட்ட பாதாளகோஷ்டி போன்ற சில கும்பல்களாலேயே இக் கொலை மிரட்டல்கள் தொலைபேசி மூலமாக விடுக்கப்படுவதாக அம் முறைப்பாட்டில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தனக்கு பொலிஸ் பாதுகாப்பு தருமாறும் பொலிஸ்மா அதிபர் இந்திராடிசில்வாவிடம் சிறைச்சாலை ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை எத்தகைய அச்சுறுத்தல்வரினும் தான் முன்வைத்துள்ள ஒழுக்கவிதி நடைமுறைக் கோவைகளில் மாற்றம் செய்யப்பாடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-4)




## அத்தியார் இந்துவில் பவள விழா பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் பவள விழா பிரகடனம் 2004 நிகழ்வு இன்று வியாழக்கிழமை பி.ப 1.30 மணிக்கு அதிபர் இ.குணநாதன் தலைமையில் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், யாழ்.வலயக்கல்வி பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி இ.சிவஞான சுந்தரம் மற்றும் யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி பா.தனபாலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர் கை.கவியன்பன் மற்றும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை உபஅதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-18)

## அடிக்கல் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

கட்டடத் திணைகளத்தின் யாழ் பிராந்திய அலுவலகம் நீர்ப் திட்டத்தின் கீழ் யாழ்.குடாநாட்டில் சுகாதார வைத்திய நிலையங்களை அமைக்கவுள்ளது.

பண்ணையில் இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதற்கான அடிக்கல்லை வைத்திய கலாநிதி டாக்டர் சிவபாதம் வைபவ ரீதியாக நாட்டி வைக்கவுள்ளதாகவும் கட்டடத் திணைக்களத்தின் யாழ் பிராந்திய அலுவலக பிரதம பொறியியலாளர் சு.சுந்தரகுமார் தெரிவித் தார். (சு-18)

## நாட்டிற்குப் பயனற்றவர்களாக நாற்பதாயிரம் பட்டதாரிகள்

(கொழும்பு)

தகுந்த திட்டங்களும் தேசிய கொள்கைகளும் வகுக்கப் படாததால் நாற்பதாயிரம் பட்டதாரிகள் நாட்டின் அபிவிருத்திக்கு பயனற்றவர்களாக இருந்து வருகின்றனர்என கூட்டு வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் நீண்டகாலமாக நிலவிவரும் இக்குறைபாட்டை போக்க புதிதாக உருவாக்கப்பட்ட மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி தீர்வு காணுமென தாம் எதிர்பார்ப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை இவர்களுக்கான வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் வகையிலான செயற்திட்டங்களை விரைந்து முன்னெடுத்து பட்டதாரிகளை நாட்டிற்குப் பயனுடையவர்களாக ஆக்குவது கட்டாய தேவை எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (உ-4)

### கடை உடைத்துத் திருட்டு

நாவலர் வீதி அத்தியடியில் உள்ள பலசரக்கு வியாபார நிலையம் ஒன்றில் இருந்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களும், 15 ஆயிரம் ரூபா பணமும் களவாடப் பட்டுள்ளது.இச் சம்பவம் குறித்து யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ச)

## எகிப்து சிறைகளில் இருந்து 100 பேர் நாடுதிரும்பினர்

(கொழும்பு)

எகிப்து சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் நேற்று நாடுதிரும்பியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் இலங்கையில் இருந்து சட்டவிரோதமான முறையில் இத்தாலி செல்லும் வேளை எகிப்திய பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அங்கு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் அனைவரையும், அந்நாட்டு அரசு விமானம் மூலம் இலங்கைக்குத் திருப்பியனுப்பியுள்ளது. மேலும் இவர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுவருகின்றனர். (தி-60)

# மட்டு.பொங்கு தமிழ் நிகழ்வுகள்...









# குடாநாட்டு மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணம் ஆசிரியர்களே

**வாசகர்களே! வலம்புரியின் விவாத அரங்கு இன்று முதல் உங்கள் கருத்துக்கு விருந்தளிக்க வருகிறது.**

**மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணம்**

**ஆசிரியர்களா?**

**மாணவர்களா?**

**பெற்றோர்களா?**

என்ற தலைப்பில் ''**ஆசிரியர்களே**'' காரணமென சாடுகிறார்

**ஆதிரையன்**

''யாழ்.குடாநாட்டு மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்குப் பெரிதும் காரணமாக விளங்குவது? ...'' இன்றைய சூழ் நிலைக்குப் பொருத்தமான ஒரு தலையங்கம்.

''**கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக**'' தெய்வப் புலவரின் பொய்யா மொழி இது .

கற்றவர்கள் தாம் பெற்ற கல்வியறிவை நல்ல வழிமுறைகளில் பயன்படுத்துவதையும், கற்றதன் பால் ஒழுகுவதையும் பொட்டிட்டு காட்டியிருக்கிறார் வள்ளுவப் பெருந்தகை. அதேபோலவே ''**கற்றது கை மண்ணளவு - கல்லாதது உலகளவு**'' என்று ''கற்றல்; தேடல்'' என்ற அர்த்தத்துக்குப் பொருள் பொதித்துப் போந்தார் தமிழ்க்கிழவி,

இவ்வாறெல்லாம் போற்றப் படுகின்ற கல்வி, எமது கல்வித் திட்டத்துக்கமைவாக பல்கலைக் கழக அனுமதி நோக்கி நகருவது ஒரு சாபக்கேடே. வெறுமனே மாணவர்களைப் புத்தகப்பூச்சிகளாக உருவாக்குவதற்குத்தான் இன்றைய கல்வித்திட்டம் வழி வகுக்கின்றது என்பது ஒரு கசப்பான உண்மை. கற்றறிந்து, தாம் கற்றவற்றை உலகுக்கு ஊட்டி, கற்றாங் கொழுகுகின்ற ''**நிறைவான கல்விக்கு**'' எமது கல்வித்திட்டம் உகந்ததல்ல,

இது ஒருபுறமிருக்க பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளில் எடுக்கின்ற கவனமென்பதும் முக்கியமான காரணிகள் தான்.

எல்லாவற்றுக்கும் மேலான யாழ்ப்பாணத்தில் இன்றைய நிலையில் கல்வித் தராதரம் அருகிப் போவதற்கு முக்கிய காரணம் ''**ஆசிரியர்களின் அசமந்தப் போக்குத்தான**'' என்று அடித்துக் கூறலாம்,

ஒய்வு பெற்ற ஆசிரியன் என்ற வகையிலும், நான் ஆசிரியனாக இருந்த போது உள்ள நெளிவு சுழிவுகளையும், மாணவர்களின் மனப்பாங்கு, நடத்தைகளையும் வைத்துப் பார்த்திருக்கின்ற போது குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி வைத்துப் பார்க்கிறேன்.

> "ஆசிரியர்" - எங்களுடைய காலத்தில் "வாத்தியார்" என்று சொல்வார்கள். ஒரு உபாத்தியாருக்கும் மாணவர்களுக்கும் இடையிலான உறவு வார்த்தைகளால் வரையறுக்க முடியாத ஒன்று.
>
> ஆனால் இன்று... "அந்த வாத்திக்கு ஒரு குழு; இந்த வாத்திக்கு ஒரு குழு" என குழுமுறை கலாசாரம் (ரவுடீஸம்) உருவாகி இருக்கின்றதை நோக்கும் போது ஒரு பக்க நெஞ்சில் வலி காண்பதைத் தடுக்க இயலாதிருக்கின்றது.

அதேநேரம் - குடாநாட்டின் சில பாடசாலைகளில் இன்று நடக்கின்ற கூத்துக்களைக் காட்டியும் எனது வாதத்தை முன்வைக்கின்றேன்.

''ஆசிரியர் - எங்களுடைய காலத்தில் வாத்தியார் என்று சொல்வார்கள். ஒரு உபாத்தியாருக்கும் மாணவர்களுக்குமிடையிலான உறவு வார்த்தைகளால் வரையறுக்க முடியாத உறவு ஆனால் இன்று "**அந்த வாத்திக்கு ஒரு குழு; இந்த வாத்திக்கு ஒரு குழு**'' வென குழுமுறைக் (ரவுடீஸம்) கலாசாரம் உருவாகி இருக்கிறதென்பதை நோக்கும் போது ஒரு பக்க நெஞ்சில் வலி காண்பதைத்தடுக்க இயலாதிருக்கின்றது.

"**இராமன் ஆட்சியும் இராவணன் ஆட்சியும**" என்ற பழமொழி போல யார் அதிபராக இருந்தாலும்

## விவாத அரங்கு

தில். ஒரு பாடசாலை - ஓர் அதிபர் - ஒரு தலைமைக்காகக் கடமை - கண்ணியம் - கட்டுப்பாட்டுடன் உழைத்தார்கள் அன்றைய ஆசிரியர்கள். அதேபோல மாணவர்களின் கவனமும் கல்வி நோக்கி ஒரு திசையில் இருந்தது.

இன்று பதவி ஆசையினால் ஆசிரியர்கள் ஒருவரை ஒருவர் பிடித்துத்தின்ன, அவருக்கும் இவருக்குமாக "**ஏந்திப் பிடிக்கும**'' மாணவர்களின் கவனம் எங்கே போகிறது?

அண்மையில் நடந்த; அறிந்த சம்பவம் ஒன்று

அது நடந்தது ஒரு பிரபல பாடசாலையில். அதுவும் தேசிய பாடசாலை. வருடா வருடம் பல்கலைக் கழகத்துக்குப் படைபடையாய் மாணவர்களை அனுப்பிவைக்கின்ற பாடசாலை அது.

திடீரெனக் கல்விப் பெறுபேறுகளில் பெரும் வீழ்ச்சி 25% வீதமானவர்களுக்குமேல் சகல பாடங்களிலும் பெயிலாகிவிட்டனர்.

யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்தின் தலையில் இடியென இச்செய்தி இறங்குகிறது. யாது செய்வது? ஒருவருக்கும் தெரிய

கள் நீளுகின்றன.

பழைய மாணவர்கள், பல்கலைக்கழகப் பட்டறிந்த சமுதாயமென ஆய்வுக்குரிய விடயமாக மாறுகிறது இவ் விடயம்,

திடீரென கல்வித்திணைக்கள மேல்மட்டங்களும் களத்தில் குதிக்கின்றன. அதிபருக்கெதிரான குற்றச்சாட்டுகளில், ''பெறுபேறு வீழ்ச்சியும்'' ஒரு குற்றச்சாட்டாகிறது.

தனியே அதிபர் அதற்கு ஒரு போதும் பொறுப்பாளி ஆகிவிட முடியாது. அதிபர் கற்பிப்பதில்லை, அப்படியாயின் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் என்ன செய்கிறார்கள்?

இது கேள்வி; ஆசிரியர்கள் தனிப்பட்ட வகுப்பு நோக்கி மாணவர்களைத் திசைதிருப்புகிறார்கள் என்ற விடைகிடைக்கிறது.

சார், பாடசாலையில் ஆசிரியர்கள் கற்பிப்பதில்லை என்றால் நிர்வாகம் அனுமதிக்கிறதா?

இரண்டாவது கேள்வி எழுகிறது, ஆம் நிர்வாகம் அனுமதிக்கிறது, எவ்வாறு? அதிபர் நேரடியாகத் தலையிடாமல் பதவி வழியாகப் பொறுப்பான அதிபர் தரம் எதுவுமற்ற ஓர் ஆசிரியரிடம் விடுகிறார். கல்வி நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவரோ ஆசிரியர்கள் டியூட்டறியில் ''டே'' கிளாஸ் எடுப்பதற்கு வழி அனுப்பி வைக்கிறார், அதிபருக்கும் பல விடயங்கள் தெரிவதில்லை,

இது விடயமாக ஒரு நாள் ஆசிரியர் ஒருவர் டியூட்டறிக்குப் போவதற்காக அரைநாள் லீவு கேட்டார், அதிபரிடமல்ல அடுத்தவரிடம்... ஏன் லீவு ? நீங்க போங்கோ, அதிபர் நிண்டா இப்படி உங்கள விடுவாரோ நான் எண்டபடியால்" என்று அனுமதிக்கிறார்,

அதிபருக்கு விசயம் தெரிந்திருக்கவில்லை, சிறு அலுவலாக வெளியில் போனவர் திரும்பி வந்து பார்க்கிறார்,

ஆசிரியர்களின் மோட்டார்

அடுத்தவரிடம் ஒப்படைத்த பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார். அடுத்த பாடவேளை மாணவர்கள் சத்தம் போடும் வகுப்பறை ஒன்றுக்கு அதிபர் போகிறார்.

"யார் பிள்ளையள் உங்களுக்குப் பாடம்?'' கம்பீரமாக ஒலிக்கிறது அதிபரின் குரல்.

" ம..........ன் சேர்........சேர்''

" ஏன் அவர் வந்தவர் தானே.... மோட்டார் சைக்கிளும் நிக்குது.... கையெழுத்தும் போட்டிருக்கிறார்... சோட்லீவு எடுத்ததையும் தெரியேல்லை .... போங்கோ போய்த்தேடிக் கொண்டு வாருங்கோ....!''

அதிபர் மெல்ல நகர்கிறார், மோட்டார் சைக்கிளைப் பக்குவமாக அதிபரின் பார்வைக்கு விட்டு விட்டு மாணவன் ஒருவனின் சைக்கிளில் ரியூட்டறிக்குச் சென்று விட்ட ஆசிரியரின் "**தோல் இருக்க சுளை விழுங்கும**'' சாணக்கியம் அதிபருக்கு எங்கே புரியப்போகிறது.

அதே போலவே இரண்டாம் நிலைப் பதவியிலுள்ள ஒரு ஆசிரியரின் கதை.

கல்லூரிக்கு நீண்டகாலமாக பிரதி அதிபர் இல்லை. அதனால் நிண்ட சேவையுடைய ஆசிரியர் இரண்டாம் நிலைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

ஆனால் அவரே முதலாம் நிலையில் இருப்பவரை முழுக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்.

இரண்டாம் நிலைக்காக (தரம் -1) அதிபர் ஒருவர் மாற்றலாகி வருகிறார். வேறொருவர் அவரை நசுக்க பல திட்டங்கள்...

நாட்கணக்கில் .... மாதக் கணக்கில்...மாணவர்களைத் தூண்டி விடுவதற்கான வழி முறைகள்....

மாணவர்களும் கும்பலில் கோவிந்தா பாடுவதற்குத் தயாராகுகிறார்கள்.....

அப்புறமென்ன படிப்பதற்கு ஏது நேரம்?

எனவே கல்வி நிலை வீழ்ச்சிக்குக்காரணம் ஆசிரியர்கள் தான் என்பது என்வாதம்,

எங்கே பார்ப்போம் இனி

அருகிப் போவதற்கு முக்கிய காரணம் "**ஆசிரியர்களின் அசமந்தப் போக்குத்தான**" என்று அடித்துக் கூறலாம்,

ஓய்வு பெற்ற ஆசிரியன் என்ற வகையிலும், நான் ஆசிரியனாக இருந்த போது உள்ள நெளிவு சுழிவுகளையும், மாணவர்களின் மனப்பாங்கு, நடத்தைகளையும் வைத்துப் பார்த்திருக்கின்ற போது எனது அனுபவத்தின் வாயிலாக இன்றைய ஆசிரியர்களை நான்

குழு ... வென் குழுமுறைக் (ரவுடீஸம்) கலாசாரம் உருவாகி இருக்கிறதென்பதை நோக்கும் போது ஒரு பக்க நெஞ்சில் வலி காண்பதைத்தடுக்க இயலாதிருக்கின்றது.

"**இராமன் ஆட்சியும் இராவணன் ஆட்சியும**" என்ற பழமொழி போல யார் அதிபராக இருந்தாலும் ஆசிரியர்கள் கடமையைத் தவிர வேறெதையும் நினைத்தும் பார்ப்பதில்லை. அந்தக் காலத்

கின்ற பாடசாலை அது.

திடீரெனக் கல்விப் பெறுபேறுகளில் பெரும் வீழ்ச்சி 25% வீதமானவர்களுக்குமேல் சகல பாடங்களிலும் பெயிலாகிவிட்டனர்.

யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்தின் தலையில் இடியென இச் செய்தி இறங்குகிறது. யாது செய்வது? ஒருவருக்கும் தெரியவில்லை. வழமை போல் முட்டாள் தனமாக அதிபரை நோக்கி விரல்

வாட்டம்... ஏன் லீவு ? நீங்க போங்கோ, அதிபர் நிண்டா இப்படி உங்கள விடுவாரோ நான் எண்ட படியால்" என்று அனுமதிக்கிறார்,

அதிபருக்கு விசயம் தெரிந்திருக்கவில்லை, சிறு அலுவலாக வெளியில் போனவர் திரும்பி வந்து பார்க்கிறார்,

ஆசிரியர்களின் மோட்டார் சைக்கிள்கள் எல்லாம் நிற்கின்றன, ரியூட்டறிக்கு சென்றவருடைய மோட்டார் சைக்கிளும் நிற்கிறது,

மாணவர்களும் கும்பலில் கோவிந்தா பாடுவதற்குத் தயாராகுகிறார்கள்.....

அப்புறமென்ன படிப்பதற்கு ஏது நேரம்?

எனவே கல்வி நிலை வீழ்ச்சிக்குக்காரணம் ஆசிரியர்கள் தான் என்பது என்வாதம்,

எங்கே பார்ப்போம் இனி உங்கள் வாதங்களுக்காக எனது கருத்தை விதைக்கக் காத்திருக்கிறேன்.

# பேரினவாதிகளின் கூட்டு

# தமிழர் உரிமைகளுக்கு வேட்டு

## சிவாஜிலிங்கம் எம்.பி. சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளைப் பல வீனப்படுத்தும் முயற்சியாகவே ஜே.வி.பியினருக்கும் ஸ்ரீலங்கா சுதந்தரக்கட்சிக்கும் இடையே கூட்டமைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் குற்றம் சாட்டியுள்ளார்.

இது பற்றி மேலும் கருத்து தெரிவித்துள்ள சிவாஜிலிங்கம், பேச்சுவார்த்தைகள் மூலம் தமக்குரிய உரிமைகளை பேரினவாத அரசியல் தலைவர்கள் தருவார்கள் என்ற நம்பிக்கையை என்றோ தமிழினம் இழந்து விட்டது.

இந் நிலையில் ஜே.வி.பி. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரு பேரினவாதக் கட்சிகளும் இணைந்து தமிழருக்குரிய தீர்வுகளைத் தருவார்கள் என்ற கருத்தை நாம் நம்புவதற்கு தயாராக இல்லை.

இவ்விரு கட்சிகளும் சமாதான முயற்சிகளை மிகவும் விரும்புவதாக காட்டிக் கொள்வது விசுவாசமானதொரு கருத்து வெளிப்பாடு அல்ல. இது சர்வதேசத்திற்குத் தம்மை நல்லவர்களாகக் காட்டிக்கொள்ளும் வேடம் மட்டுமே.

எனவே, தமிழரது வாழ்வுரிமைக் கோரிக்கைகளை நாட்டைப் பிளவுபடுத்தும் கோரிக்கை எனக் கூறி எதிர்க்கும் இவ்விரு கட்சிகளும் இணைந்து கொண்டமை தமிழர்களுக்கு ஒரு துக்கதினமே என்றார்.

(உ-4)

### விரிவுரைகள் 26 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் 2004 ஆம் ஆண்டின் கலை, வர்த்தக, முகாமைத்துவ, விஞ்ஞான, விவசாய பீட புகுமுக மாணவர்களுக்கான விரிவுரைகள் அனைத்தும் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன. (உ-7,1)

## கூட்டு ஒப்பந்த நிகழ்வை

## கிறிஸ்தவ மதகுருக்கள் புறக்கணிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பியினருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையான கூட்டமைப்பு ஒப்பந்தப் பெருவிழாவை கிறிஸ்தவ மதகுருக்கள் முற்றாகப் புறக்கணித்துள்ளனர்.

நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மேற்படி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்நிகழ்வில் பௌத்த, இந்து, இஸ்லாமிய ஆசிகளை மதகுருமார்கள் கலந்து கொண்டு ஆசிகளை வழங்கினர்.

அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையிலும் கிறிஸ்தவ மதகுருமார்கள் எவரும் இதில் கலந்து கொண்டு ஆசி வழங்கவில்லை.

அண்மைக்காலமாக இலங்கையில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது இடம் பெற்றுவரும் வன்முறைகளுக்குப் பின்னால் ஜே.வி.பியினர் உள்ளதாக குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது.

இந் நிலையில், இவர்களுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் இணைவது கிறிஸ்தவர்களது நலன்களை மேலும் பாதிக்கும் எனக் கருதி இதற்கு எதிர்புத்தெரிவிக்கும் முகமாகவே கிறிஸ்தவ மதகுருக்கள் இந் நிகழ்வை புறக்கணிப்பு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-4)

### மாணவர்களுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

வடமாநில இந்துமா மன்றம் யாழ். முத்துத் தம்பி வித்தியாசாலையில் கல்வி கற்கும் வறுமைக்கோட்டின் கிழ் வாழும் மாணவர்களுக்கு கடந்த திங்களன்று பாடசாலை அப்பியாசக் கொப்பி மற்றும் எழுது கருவிகள் ஆகியவற்றை வழங்கியுள்ளது. (உ-18)

## இன்று ஒரு தகவல்

# குழந்தையின் அழுகை

ஒருவர் வேகமாக நடந்து வந்து கொண்டிருந்தார். "என்னசார் விசேஷம்? "என்று கேட்டேன் . "வீட்டில் ஒரே சத்தம் சார் அதுதான் புறப்பட்டு வெளியில் வந்து விட்டேன்" என்றார். "என்ன சத்தம்? " என்று கேட்டேன். "குழந்தை போடும் சத்தம்தான் சார். எந்த நேரம் பார்த்தாலும் அழுகிறான். என்னால் எப்படி நிம்மதியாக இருக்க முடியும்? " என்றார். "குழந்தை என்று இருந்தால் அது அழத்தானே செய்யும். இதற்குப் போய் அலுத்துக் கொள்கின்றீர்கள்!" என்றேன். "என்ன இப்படிக் கூறுகின்றீர்களே" என்பது போல் என்னை ஒரு மாதிரிப் பார்த்தார்.

அதன்பின்தான் அவரிடம் சிறிது விபரமாகப் பேசினேன். டாக்டர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்ட விடயத்தை அவரிடம் கூறினேன். அழுகை என்பது குழந்தையின் பாஷை. அதற்குப் பேசத் தெரியவில்லை அதனால் அழுகின்றது. அழுகை மூலமாகத்தான் குழந்தை தனது தேவைகளைத் தெரிவிக்க முடிகிறது. அதனால் காரணத்தைப் பொறுத்து குழந்தை அழும். அழும் விதத்தை வைத்தே அது எதற்காக அழுகின்றது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

குழந்தையின் அழுகைக்கான காரணம் அம்மாவுக்குச் சுலபமாகப் புரியும். அப்பாவுக்கு அது அவ்வளவு சீக்கிரத்தில் புரியாது. "சனியன்... எதற்குக் கத்துகிறது" என்று கூறிவிட்டு எழுந்து போய் விடுவார். அவருக்குத் தெரிந்தது அவ்வளவுதான்.

ஒரு குழந்தை பிறந்து ஓரிரு நாட்களுக்குள்ளே படுக்கை ஈரமானால் அதைத் தெரிவிப்பதற்கு அழும், பசி எடுத்தால் அழும், தாகம் எடுத்தால் அழும், ஏதாவது வலி ஏற்பட்டாலும் அழும், திடீரென்று ஏதும் பெரிய சத்தம் கேட்டால் குழந்தை திடுக்கிட்டு விடும். பிரகாசமான ஒளி அதன் கண்ணைக் கூசவைக்கும். எதிர்பாராத திடீர் அசைவுகள் அதற்கு மெல்லிய அதிர்வைக் கொடுக்கும். இவைகள் யாவும் குழந்தையை அழ வைக்கும்.

எப்போதும் அழும் குழந்தைகளும் உண்டு. எப்போதாவது சிணுங்கும் குழந்தைகளும் உண்டு. இது அந்தந்தக் குழந்தையின் சுபாவத்தைப் பொறுத்த விடயம். பசிக்காக அழும் குழந்தை சத்தம் போட்டு அழும். இப்போதுதானே பால் கொடுத்தோம் என்று நீங்கள் நினைக்கலாம். குழந்தை தேவைக்கு ஏற்றமாதிரியோ நேரத்துக்குத் தகுந்த மாதிரியோ சாப்பிடுவதில்லை. அதற்கு எந்தநேரமும் பசி எடுக்கலாம். பசி எடுத்தால் உடனே கூப்பாடுதான். அவ்வளவுதான் அதற்குத் தெரியும். நாம்தான் புரிந்துகொள்ள வேண்டும். சில குழந்தைகள் இரவிலும் பசியால் அழும். சில குழந்தைகள் அப்படியல்ல பேசாமல் உறங்கிவிடும்.

பொதுவாக 18 மாதம் ஆகும்போது குழந்தைகள் இரவில் இடைஞ்சல் தராமல் உறங்கும். குழந்தை உண்ணும் உணவு ஜீரணமாகும் போது உண்டாகும் வாயு குழந்தைக்கு வயிற்றுவலியைக் கொடுக்கலாம்.

# கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு ஐரோப்பிய ஆணைக்குழு நிதி உதவி

(கொழும்பு)

கடந்த கால யுத்த அனர்த்தங்களின்போது புதைக்கப்பட்ட நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்காக ஐரோப்பிய ஆணைக்குழுவின் மனிதாபிமான உதவி அலுவலகம் 250 மில்லியன் ரூபாவை இலங்கைக்கு வழங்க முன்வந்துள்ளது.

இந் நிதி உதவி வடக்கு- கிழக்கு பகுதிகளில் புதைக்கப்பட்ட நிலக்கண்ணி மற்றும் வெடிபொருட்களை அகற்றுவற்கு பயன்படுத்தப்படவுள்ளது

அத்துடன், இந்நிதி உதவி மூலம் கண்ணிவெடி பற்றிய விழிப்புணர்வுக் கற்கைநெறி, கண்ணிவெடிகள் உள்ள பிரதேசங்களை இனங்காணல்,அப்பிரதேசங்களின் பாதுகாப்பு பொறிமுறை மற்றும் மனித கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு உதவுதல், கண்ணிவெடியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவி வழங்கும் செயற்றிட்டங்கள் ஆகியன மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை, கண்ணிவெடி அகற்றும் மாற்றுப் பிரேரணைகளையும் ஐரோப்பிய ஆணைக்குழு முன்வைத்துள்ளது.

இம்மாற்றுப் பிரேரணைகளிற்கு அமைய இவ்வாண்டு நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படும் இச் செயற்றிட்டங்கள் அடுத்த ஆண்டு இறுதிவரை நீடிக்கவுள்ளன.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதையடுத்து ஐரோப்பிய யூனியன் ஒரு பில்லியன் ரூபாவை இப்பணிகளுக்கென வழங்கியுள்ளது.

இச் செயற்றிட்டங்களின் மூலம் கண்ணிவெடி அகற்றப்பட்ட பாதுகாப்பான பிரதேசங்களில் 3 இலட்சத்து 30 ஆயிரம் மக்களை மீள் குடியமர்த்த முடியுமென ஐரோப்பிய யூனியன் நம்பிக்கை தெரிவித்துள்ளது. (தி-60)

# சிறுபான்மை இனங்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் ஜனாதிபதி ஆர்வமாகவுள்ளார்

## அலவி மௌலானா எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

புலிகளுடன் பேசுவதை ஜே.வி.பியினர் எதிர்த்திருப்பார்களேயானால் ஜனாதிபதி அவர்களுடன் கூட்டுச் சேர முன்வந்திருக்கமாட்டார் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உபதலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அலவி மௌலானா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா பேரினவாதி என பலராலும் விமர்சிக்கப்பட்டாலும் சிறுபான்மை இனத்தவரது பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் பேச்சுக்களில் அவர் மிகவும் கரிசனை காட்டிவருகிறார்.

அந்த அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களைத்தான் திட்டமிட்டபடி நடத்துவதற்கு இடையூறாக ஜே.வி.பியினர் இருக்கக்கூடாது என்பதற்காகவே அவர்களையும் தன் கொள்கையில் இணைத்துக் கொண்டார்.

ஜனாதிபதியின் இக் கொள்கைக்கு ஜே.வி.பியினர் இசைந்து போவதற்கு உறுதியளிக்காவிடில், மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி என்ற முடிவுக்கு அவர் வந்திருக்க மாட்டார்.

ஜே.வி.பியினர் ஜனாதிபதியின் கொள்கைக்கு இசைந்து போவதாகத் தெரிவித்த பின்னரே இவ் ஒப்பந்தம் கைச்சாத்தாகியது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4)

# கூட்டணிக் கொண்டாட்டங்களை ஐ.தே.கட்சியினர் குழப்பினர்

## கட்சி ஆதரவாளர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் ஆதரவாளர்களே தம்மைத் தாக்கியதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவாளர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய இரு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டு ஒப்பந்தம் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

இக் கைச்சாத்திடும் வைபவத்தைக் கொண்டாடும் நிகழ்வுகளில் ஈடுபட்டிருந்த மேற்படி கட்சிகளின் ஆதரவாளர்களை ஐக்கியதேசியக்கட்சி ஆதரவாளர்கள் தாக்கினர்.

இதனால் கொண்டாட்ட நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்த இரு கட்சிகளின் ஆதரவாளர்கள் இருவர் உயிரிழந்துள்ளதுடன், பெறுமதிமிக்க உடைமைகளுக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

மத்துகம உட்பட பல்வேறு இடங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது காயமடைந்த ஸ்ரீ.சு.க.,ஜே.வி.பி.ஆதரவாளர்கள் பலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (தி-60)

## இராசி பலன்

**22 .01. 2004**

**(தை 8, வியாழக்கிழமை)**

| | | |
|---|---|---|
| பிரதமை | பின்னிரவு | 1.49 வரை |
| உத்தராடம் | முற்பகல் | 8.06வரை |
| இராகுகாலம் | 2.05-3.35 | மணிவரை |
| சுபநேரம் | 8.05-9.35 | மணிவரை |

**மேடம்**

செய்தொழில் முன்னேற்றம், நல்ல செய்தி அறிதல், மேன்மை, காரிய அனுகூலம்.

**இடபம்**

சரீரப்பிரயாசை, ரோக பயம், பிதா சிந்தை, கட்டுப்பாடு.

**மிதுனம்**

அவமானம், காரிய தடங்கல், பிரயாணபயம், உடல் நலக்குறைவு.

# கடற்படையின் ஒத்துழைப்புடன் தென்னிந்திய மீனவர்கள் மன்னார் கடலிலும் அத்துமீறல்

(மன்னார்)

மன்னார் இரணைதீவுக் கடற்பரப்பில் தென்னிந்திய

வாயு குழந்தைக்கு வயிற்றுவலியைக் கொடுக்கலாம். அதனாலும் அது அழலாம். ஆகாரம் கொடுத்ததும் குழந்தையைத் தோளில் சாய்த்துத் தட்டிக் கொடுக்க வேண்டும். தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்களுக்குப் பத்தியம் தேவைதான். அவர்கள் சாப்பிடும் சில உணவுகள் தாய்ப்பால் மூலமாக குழந்தைக்குப் போகும்போது அதன் வயிற்றில் வலி உண்டாகலாம்.

சில சமயம் தாயார் சாப்பிடும் பசும் பாலில் கூட குழந்தைக்கு வயிற்றுவலி வரலாம். பாலில் உள்ள புரதம் இந்த வேலை செய்யும். தூக்கம் வந்தால் அழும். குழந்தைக்கு போரடித்தாலும் அது அழும். இன்னொருவர் அரவணைப்பில் இருக்க ஆசைப்படும். அந்த சமயத்தில் அப்படி யாரும் கிடைக்காவிட்டாலும் அழும்.

அதனால் ஒரு குழந்தை அழுதால் ஏன் அழுகின்றது என்று புரிந்துகொண்டு உடனே அந்த அழுகையை நிறுத்த வேண்டும்.

ஒரு வீட்டில் சிறு பிள்ளை ஒன்று அழுதுகொண்டே இருந்தது. ஒரு பெரிய பிள்ளை அதற்குக் காவல். தாய் சமையல் அறையில் இருந்து கொண்டு கேட்டார் " தம்பி ஏன் அழுகின்றான்? " என்று. "தம்பியின் கண்ணில் எண்ணெய் பட்டுவிட்டது அதுதான்" என்றான் அந்தச் சிறுவன். "அதைப் பார்த்துக்கொண்டு நீ சும்மாவா இருந்தாய்?" என்றார் தாயார். "இல்லை அம்மா... கண்ணில் எண்ணெய் பட்டவுடன் நான் உடனே அதைப் போக்குவதற்கு அரப்புத் தூளை வைத்துத் தேய்த்து விட்டேன் " என்றான் அந்தப் பையன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

உடல் நலக்குறைவு.

**கடகம்**

போசன நன்மை, குடும்பதில் நல்ல காரியம், தொழில் வருமானம், புத்தி சாதுரியம்.

**சிங்கம்**

சத்துரு ஜெயம், தேக ஆரோக்கியம், எடுத்த காரியம் கைகூடும், புதிய விடயம்.

**கன்னி**

வியாபார நன்மை, மனக்கிலேசம், காரிய தாமதம், தாழ்ந்த சுபாவம்.

**துலாம்**

தாய்வழி உறவு, கல்வியில் ஆர்வம், தொழில் மந்த நிலை, முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**

பிரயாண நன்மை, நல்ல முயற்சி, உறவினர் வழி நன்மை, போசன சுகம்.

**தனுசு**

வஞ்சகம், காரியதாமதம், வீண் விவாதம், பிரயாண நன்மை.

**மகரம்**

சிந்தனை மிகுதி, பெரியோர் சந்திப்பு, முயற்சி கைகூடும், பிரயாண இடையூறு.

**கும்பம்**

சயன சுகக்குறைவு, மனக்கிலேசம், நண்பர்கள் விரோதம், முயற்சி தாமதம்.

**மீனம்**

நல்ல மனைவாசம், எடுத்த காரியம் கைகூடும், கௌரவமான நிலை, பொருள் சேர்க்கை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

\- வளவன்.

(மன்னார்)

மன்னார் இரணைதீவுக் கடற்பரப்பில் தென்னிந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இந்தியக் கடற்படையின் பாதுகாப்புடன் அத்துமீறி நுழைந்த 800ற்கு மேற்பட்ட மீன்பிடி ரோலர்களில் வந்த தமிழக மீனவர்களே இவ்வாறு சட்டவிரோதமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் அப்பகுதி மீனவர்கள் தொழிலில் ஈடுபட அச்சம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இவ்வாறான அத்துமீறல்கள் குறித்து இப்பகுதி கடற்றொழிலாளர்கள் பலதரப்பிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இலங்கை கடற்பரப்பில் அதிக வளம் காணப்படுவதால் இவ்வாறான அத்துமீறல்கள் அதிகரித்து வருவதாகவும் இவ்வாண்டு ஆரம்பத்தில் இருந்து இற்றைவரை இடம்பெற்ற அத்துமீறல்களால் மன்னார் கடல் பிராந்தியத்தில் இருந்து 420 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட கடல் வளங்கள் இந்திய மீனவர்களால் சூறையாடிச் செல்லப்பட்டுள்ளதாகவும் பேசாலை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத் தலைவர் சகாயம் பீரிஸ் தெரிவித்துள்ளார். (உ-4)

## ஜப்பானிய பிரதிநிதிகள் யாழ்.வருகின்றனர்

(யாழ்ப்பாணம்)

ஜப்பானிய அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் குழுவொன்று இன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளது.

ஜப்பானிய அரசாங்கத்தின் உதவித் திட்டத்தின் கீழ் இங்கு ஆரம்பிக்கப்படவுள்ள வேலைத் திட்டங்கள் குறித்து இவர்கள் ஆராயவிருப்பதுடன், பி.ப. 3.00 மணிக்கு யாழ்.மாவட்ட அரசசார் பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அதன் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசவுள்ளனர். (உ-16)

# ஜனாதிபதி - பிரதமர் கதிரைப் போட்டி தமிழர் உயிரோடு விளையாடுவதாகவுள்ளது

## துணைவேந்தர் மோகனதாஸ் கவலை

(கொழும்புத்துறை)

உலக நாடுகள் பலவும் சேர்ந்து கொழும்பு அரசியலை ஆட்டிப் படைக்கின்றன. தமிழர்கள் மிகவும் விழிப்புடன் செயற்பட வேண்டிய தருணம் இது.

இச் சந்தர்ப்பத்தில் தான் நாம் தமிழர் என்ற ஓரணியில் திரண்டு எமது உரிமைக் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்யுவேண்டும்.

யாழ்.பல்கலைக் கழகத்தில் கடந்த சனியன்று இடம்பெற்ற பொங்கு தமிழ் எழுச்சியின் மூன்றாம் ஆண்டு நினைவு நிகழ்வில் உரையாற்றிய யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எமது மண்ணில் இரண்டு இலட்சம் மக்கள் தமது இருப்பிடங்களை இழந்து ஏதிலிகளாகத் திரிகின்றார்கள்.

உயர் பாதுகாப்பு வலயம், மிதிவெடி அச்சம் ஆகியனவே இவர்களை இந்த நிலைக்கு இட்டு வந்திருக்கின்றது.

பொங்குதமிழ் நிகழ்வுகள் மூலம், எமது மக்கள் படுகின்ற இத்தகைய துன்பங்களை எடுத்தியம்ப வேண்டும்.

கொழும்பில் அரசியல் நாடகம் அதி உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்றது. ஜனாதிபதி - பிரதமர் கதிரைப் போட்டி தமிழர்களின் உயிரோடு விளையாடுவதாகவுள்ளது.

எமக்கு வேண்டுவது சமாதானம் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு. இதற்கு தமிழ் மக்களும் சர்வதேச சமூகமும் ஊக்கம் கொடுக்க வேண்டும்.

பல்கலைக்கழகங்களின் இலக்கு கற்றல் மட்டுமல்ல



ஆராய்ச்சி, சமூக அபிவிருத்தி இவை இரண்டிலும் ஈடுபடும்போது தான் அவற்றின் இலக்கு முழுமையடையும்.

இதன் ஒரு வெளிப்பாடே பல்கலைக்கழக சமூகத்தின் பொங்கு தமிழ் நிகழ்வு. இவ்வாறான நிகழவுகள் இன்னும் பற்பல முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கூறினார். (உ-51)

## நற்கருணைப் பணியாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் முதல் தடவையாக யே.ஈ.இராசநாயகம், ஏ.எஸ்.அகஸ்ரின், எஸ்.பெனடிக்ற் ஆகியோர் நற்கருணைப் பணியாளர்களாக நியமனம் செய்யப்படவுள்ளனர்.

இந் நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் யாழ்.ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் இடம் பெறவுள்ளது. (உ)

## திருப்பலி நிறைவேற்றல்

(யாழ்ப்பாணம்)

புனரமைக்கப்பட்ட ஊர்காவற்றுறை மேற்கு வீதி புனித யாகப்பர் ஆலயத்தில் நாளை வெள்ளிக் கிழமை மாலை 5.00 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்படவுள்ளது.

இவ் வைபவத்தில் பங்குத் தந்தை அருட்திரு ஏ.ஞானப்பிரகாசம் அடிகள்,புனித-யாகப்பர் ஆலய பங்கைச் சேர்ந்த அருட்திரு.சாள்ஸ் கொலின் அடிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

# சரத் செனிவிரட்ணாவை ஆஜராகுமாறு பணிப்பு

(கொழும்பு)

பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் சரத் செனிவிரட்ணாவை எதிர்வரும் மே மாதம் 26ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றம் அழைப்பாணை விளடுத்துள்ளது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் முறைப்பாட்டின் மேலதிக அறிக்கைகளை ஆராய்ந்த கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்ற நீதிபதி இந்த அழைப்பாணையை நேற்று முன்தினம் பிறப்பித்தார்.

பொது நம்பிக்கைப் பொறுப்பாளராக பதவிவகித்த காலப்பகுதியில் பல இலட்சக்காண ரூபா மோசடியில் இவர் ஈடுபட்டார் என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளினால் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவரை நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்ட போதிலும் அவர் ஆஜராகவில்லை. இதேவேளை,இவர் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடைசெய்யும் முகமாக இவரது கடவுச்சீட்டை இரத்துச்செய்யுமாறு குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்ததும் தெரிந்ததே. (தி-60)

## வேரடி மண்

(யாழ்ப்பாணம்),

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் நடாத்தப்பட்டுவரும் ''வேரடிமண்'' பெண்கள் பங்கு பற்றும் பாரம்பரிய கலை விளையாட்டு விழாவில் இன்று மு.ப. 9.00 மணிமுதல் மாலை 7.30 மணிவரை நிர்வற்குழிச் சந்தியில் விளையாட்டு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (உ-10)


## நான்கு பேருக்கு தபால் தலை

(கொழும்பு)

மாண்புமிகு மனிதர்கள் நான்கு பேரின் ஞாபகார்த்தமாகத் தபால் தலைகள் வெளியிடுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, மக்கள் தொடர்பாடல் அமைச்சின் செயலாளர் திலக்ரணவிராஜாவைப் பணித்துள்ளார்.

வண.கலா சூரியமாபலகம தேரர், முன்னாள் நெடுஞ்சாலைகள் அமைச்சா மைத்திரிபால சேனநாயக்கா, முதலாவது தபால் அமைச்சர் சீ.சிற்றம்பலம், தொழிலாளர் தலைவர் எம்.ஜி. மெண்டிஸ் ஆகியோரைக் கௌரவிக்கும் வகையிலேயே தபால் தலைகளை வெளியிடுமாறு ஜனாதிபதி பணித்துள்ளார்.

இவர்களின் தபால் தலைகள் தேசிய வீரர் தினத்துக்கு முன்பதாக வெளியிடப்படுமென்று செயலாளர் ரணவிராஜா தெரிவித்துள்ளார். (இ-6)



அண்மையில் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் பௌதீகவியல் துறையில் விஞ்ஞானக் கல்வி முதுமாணி பட்டப் படிப்புக் கற்கை நெறி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் முறையே விஞ்ஞான பீடாதிபதி இ. குமாரவேல், பௌதீகவியற் துறைத் தலைவர் கலாநிதி போ. ஜெயநாதன் மற்றும் முதுமாணிக் கற்கைநெறி இணைப்பாளர் கலாநிதி க. கந்தசாமி ஆகியோர் உரையாற்றுவதை படத்தில் காணலாம்.

## சைக்கிளில் சமாந்தரமாக சென்றவர்களுக்கு தண்டம்

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கரவண்டியில் சமாந்தரமாகச் சென்ற குற்றத்திற்காக 9 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் நீதவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மேற்படி 9 பேரும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் அவர்களை தலா 3.50 ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். (உ-3)

## பற்றுச்சீட்டில் கையொப்பமிடலாம்




**அரசாங்க அறிவித்தல்**

**யாழ். மாவட்ட செயலகம்**

2004 ஆம் ஆண்டுக்கான பொருட்கள் சேவைகள் வழங்குனர்களை பதிவு செய்தல்

யாழ். மாவட்ட செயலகத்திற்கு பின்வரும் பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் அலுவலக நாட்களில் காலை 9.30 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2004.02.20 ஆம்

தொடக்கம் பி.ப. 4.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2004.02.20 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியவாறு அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். எனும் விலாச மிட்டு தபாலுறையின் இடது மேல் மூலையில் பொருட்கள் சேவைகள் வழங்குனர்களை பதிவு செய்தல் எனக் குறிப் பிட்டு அனுப்பிவைக்கவும்.

01. கணனி, நிழற்படப்பிரதி இயந்திரம், தட்டச்சு இயந்திரம், பக்ஸ் இயந்திரம் கொள்வனவும் உதிரிப்பாகங்களை வழங்குதலும் திருத்தமும் மற்றும் மோட்டார் வாகனங் களின் உதிரிப்பாகங்களை வழங்குதலும் அவற்றினை திருத்துதலும்.
02. காகிதாதிகள், எழுதுபொருட்கள் வழங்குதல்.
03. பாவனைப் பொருட்கள் (ஈர்க்கில் தடி, தும்புத்தடி, சவர்க்காரம், விம், காப்பிக், பைனோல், குளோரின் முதலியன)
04. மரத்தளபாடங்கள்.
05. உருக்குத் தளபாடங்கள்.
06. கட்டட தளபாடத்திருத்தம் செய்வதும் அதற்குரிய பொருட்களும்.
07. இரும்புப் பொருட்களும் மற்றும் மூலப்பொருட்களும்.
08. பீங்கான் பொருட்கள், பிளாஸ்ரிக்பொருட்கள்.
09. மின் உபகரணங்களும் உதிரிப்பாகங்களும்.
10. இறப்பர் முத்திரைகள்.
11. சீருடைத்துணிகள் மற்றும் துணிவகைகள்.
12. மின் பிறப்பாக்கி, மின்மோட்டார், நீர் இறைக்கும் இயந்திரம் வழங்குதலும் திருத்தமும் சேவிஸ் செய்தலும்.

அரசாங்க அதிபரும் மாவட்ட
செயலாளரும்
(C/7197) மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

## பற்றுச்சீட்டில் கையொப்பமிடலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் ஜே/62, ஜே/64. ஜே/68, ஜே/70, ஜே/72, ஜே/74, ஜே/75, ஜே/76,ஜே/77, ஜே/88 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ளவர்களில் மீள் குடியமர்வுக் கொடுப்பனவு ரூ 25 ஆயிரம் ரூபாவைப் பெறாதவர்களை இம் மாதம் 31 ஆம் திகதி யாழ். பிரதேச செயலகத்திற்கு வருகை தந்து கொடுப்பனவு உறுதிச் சீட்டில் கையொப்பமிடுமாறு யாழ். பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

அன்றையதினம், கிராம சேவையாளர்கள், அந்தந்த கிராமியக் குழுத் தலைவர் ஆகியோரையும் தவறாது சமூகமளிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


(உ-3)

## தெருக்கூத்து ஆற்றுகை


(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் கொள்கை முன்னெடுப்பு பிரிவின் அனுசரணையுடன் கலைத்தாய் மன்றக் கலைஞர்கள் யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலும் "இரத்த வாடையில் கலந்த தென்றல்" என்னும் தெருக்கூத்தை ஆற்றுகை செய்து வருகின்றனர்.

பொ.செ.ரதியினால் நெறிப்படுத்தப்படும் இத் தெருக்கூத்து, இன்றைய அரசியல் நிலைப்பாடுகள் குறித்த கருத்துகளை மக்கள் முன் படைப்பதாகவுள்ளது. (உ)



இவ் ஆரம்ப நிகழ்வில், திறந்த பல்கலைக்கழக விரைவுரையாளர் கலாநிதி திருமதி நயன நீலகாரவாஸன் மங்கள விளக்கேற்றுவதையும்,



இதில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:எஸ். பிரதீபன்)

### யுத்தக் குற்றவாளியாக விசாரணை செய்ய

# சதாமை எங்களிடம் ஒப்படையுங்கள் ஷியா முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

(பக்தாத்)

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம ஹுசைனை யுத்தக் குற்றவாளியாக விசாரணை செய்வதற்கு அவரைத தமமிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கோரி ஆயிரக்கணக்கான ஷியா முஸ்லிம்கள் ஈராக்கின் 4 முக்கிய நகரங்களில் ஆர்ப்பாட்டம் செய்துள் ளனர்.

ஈராக்கியர்களின் அரசியல் எதிர் காலத்தை நிர்ணயிப்பதற்கு கூடுத லான அதிகாரம் தங்களுக்கே வழங் கப்படவேண்டும் என்றும் இந்த ஆர்ப்பாட்டத்தின் போது ஷியா மக்கள் கோஷம் எழுப்பியுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் கடும்போக்கு மதத்தலைவர் அல்கட்டாரின் ஆதரவாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அதிபர் சதாம் ஹீசைனை விசார ணைகளுக்காகத் தம்மிடம் ஒப்படை க்க வேண்டுமென்ற முக்கிய நோக்கத துடன் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத் தின் போது ஈராக்கில் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப் படையினரை எதிர்க்கும் வாசகங்கள் தாங்கிய பதாதைகள் பலவும் காணப்பட்ட தாக ஆர்ப்பாட்டத்தை நேரில் கண்ட வர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, வரும் ஜுன் மாதம ஈராககிய மக்களிடம் அந்நாட்டு அதி காரங்களை அமெரிக்கா ஒப்படைக் கும் போது ஈராக்கை இனி ஆட்சி செய் வது யார் என்பதை முடிவு செய்யநேரடி தேர் தல்கள இடம்பெற வேண்டும் எனக்கோரி பெரும்பான்மை ஷியா முஸ லிம் இன மக்கள் கடந்த திங்கட் கிழமை இதே போன்ற ஆர்ப்பாட்டம ஒன்றை நடத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (து-2)

## அல்ஜீரியாவில் எண்ணெய்க்குழாய் வெடித்து;23 பேர் பலி

(அல்ஜியர்ஸ்)

அல்ஜீரியாவில் உள்ள எண் ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன் றில் இடம்பெற்ற எண்ணெய்க் குழாய் வெடிப்புச்சம்பவத்தில் 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில எண்ணெய் சுத்தி கரிப்பு நிலையத்தில் பணியாற்றிக் கொணடிருந்த மேலும் 75 பணியாளர் கள் படுகாயமடைந்துள்ளனர். இவ்வாறு படுகாயமடைந்தவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக் கலாம் என அஞ்சப்படுகிறது.

இதேவேளை, உயிரிழந்தவர் களை மீட்கும்பணியினை துரிதப் படுத்துமாறு அந்நாட்டு அரசாங்கம அவசர சேவைகள் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளது (து-2)

## வாக்கு வேட்டை விதிமுறைகளை தேர்தல் ஆணையம் வெளியிட்டது


(புதுடில்லி)

வாக்கு வேட்டையில் ஈடுபடும் அரசியல்வாதிகள் பின்பற்ற வேண் டிய நடைமுறைகளை இந்திய தேர்தல் ஆணையம் நேற்று முன் தினம் வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் விரைவில் மக் களவைத் தேர்தல்கள நடைபெற வுள்ள நிலையில் அதற்கான ஆயத் தப் பணிகளில் அரசாங்கமும் மும் முரமாக ஈடுட்டு வருகின்றது.

தற்போதைய பொருளாதார வளர் ச்சி, ஸ்திரமான பங்குச் சந்தை, மாநிலத்தேர்தல்களின் வெற்றிகள், எதிர்க்கட்சிகளின் வீழ்ச்சி, பாகிஸ் தானுடனான சமாதான முன்னெடுப் புக்கள் ஆகியவற்றை சாதகமாகப் பயன்படுததி பாரதிய ஜனதாக் கட்சி தேர்தலை முன்கூட்டியே நடத்த உத் தேசித்துள்ளது.

இநத நிலையில் வாக்கு வேட்டை நடைமுறைகளுக்கமைய அரசியற் கட்சிகள் வாக்குவேட்டையில் ஈடு படும்போது வாக்காளர்களைக் கவ ரும வகையில் நட்புறவுடன் செயற் படுவது அவசியமென தேர்தல்ஆணையம் மேலும் தெரிவித்துள்ளது. (து-9)



திபெத்தைச் சேர்ந்த புத்த மத தலைவரான தலாய் லாமா, இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்து உரையாற்றி வருகிறார். உத்திரப் பிரதேசத்தில் நடைபெற் ற நிகழ்ச்சியில் அவர் உரையாற்றிய காட்சி.

## ஐ.நா.விசேட தூதுக்குழு ஈராக்கிற்கு அனுப்பப்படும்

(நியூயோர்க்)

விசேட தூதுக்குழுவொன்றை ஈராககிற்கு அனுப்ப ஐக்கிய நாடு கள் அமைப்பு தீர்மானித்துள்ளது.

ஈராக்கின் பெரும்பான்மை இன மக்களான ஷியாபிரிவினரின் கோரிக் கைக்கு அமையவே இத்தீமானம எடுக் கப்பட்டுள்ளதாக ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனான் தெரிவித் துள்ளார்.

ஈராக்கில் விரைவில் பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறவேண்டும் என்றும் அதற்கு ஐக்கிய நாடுகள் சபை வழிவகுக்கும் என்றும் ஷியா பிரிவினர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இது தொடர்பான முதற்கட்டப் பேச்சை நடத்தும் முகமாக 4பேர் கொண்ட குழுவொன்றை ஈராக் கிற்கு அனுப்பவிருப்பதாக ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஈராக்கியர்களி டம் அதிகாரத்தை மீளக் கைய ளிக்கும் நடவடிக்கையை மேற்பார் வையிட ஐநா. சபையை மீண்டும் ஈராக் கிற்குச் செல்லுமாறு அமெரிக்கா நேற்று முன்தினம் கோரியிருந் தமை குறிப்பிடத்தக்கது. (து-2)

## மக்களவை, மாநில தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்த வேண்டும்

### செலவைக் குறைக்க அத்வானியின் யோசனை

(புதுடில்லி)

மக்களவைத் தேர்தலும் மாநில சட்டமன்றத்தேர்தல்களும் ஒரே நேரத் தில் நடத்தப்படவேண்டும் என்று துணைப்பிரதமர் எல். கே. அத்வானி யோசனை கூறியுள்ளார்.

போபாலில் அகில இந்திய மருத் துவ நிலையமொன்றிற்கு அடிக்கல நாட்டும் விழாவில் கலந்து கொண்ட எல்.கே. அத்வானி,

மக்களவைத் தேர்தலையும், சட்ட மன்றங்களின் தேர்தல்களை யும் தனித்தனியே நடத்துவதன் மூலம ஏற்படும் செலவினைக் குறைப் பதற்கு இரு தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்துவதே சிறந்த வழியெனவும்,

இது குறித்து தேர்தல் அதிகாரி களும் சம்பந்தப்பட்டவர்களும் கலந்தாலோசிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டுள்ளார். (து-2)

### யுத்த மரபுகளை மீறிய குற்றத்திற்காக

## சர்வதேச குற்றவியல் விசாரணை நீதிமன்றத்தின் முன் பிரிட்டன்?

(ஹேக்)

ஈராக் மீதான போரினபோது பிரிட் டிஷ் படையினர் நடத்திய தொடர் குண் டுத தாக்குதல்கள் யுத்த மரபுகளை மீறும் செயலாக அமையும் என சர்வ தேச குற்றவியல் விசாரணை நீதி மன்றம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை இந்த நீதிமன்றம் நடத் தத் தீர்மானித்துள்ளது.

இதனை முன்னிட்டு குண்டுத் தாககு தல்களை நேரடியாகக் கண்டவர்களி டம் இந்த நீதிமன்றம் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது. பிரிட்டனின் தொடர் குண்டுத்தாக்குதல்களினால நூற்றுக்கணக்கான பொது மக்கள் உயிரிழந்தமைக்கான சாட்சியங் கள் இருபபதாகவும் இதன் அடிப்படை யில சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணைகளுக்கு பிரிட்டன் முகம் கொடுகக நேரிடும் எனவும் தெரி விக்கப்படுகின்றது. (து-9)



இந்தியா வந்துள்ள நேபாள நாட்டின் இளவரசர் பரஸ் பிர் பிக்ரம் ஷா தேவ் புதுடில்லியில் பிரதமர் வாஜ்பாயை சந்தித்துப் பேசியபோது.

# அணுவாயுதத் திட்டங்களை பாகிஸ்தான் கைவிடாது

## ஜனாதிபதி முஷாரப் அறிவிப்பு

(இஸ்லாமபாத்)

அணுவாயுதத் திட்டத்தை பாகிஸ்தான் ஒரு போதும் கைவிடாது என்று ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் செய்தி நிறுவன மொன்றிற்கு நேற்று முன்தினம் அளித்த விசேட பேட்டியொன லேயே முஷாரப் இவ்வாறு கூறி யுள்ளார்.

அவர் தொடர்ந்து அளித்த பேட்டி யில் பாகிஸ்தானின் அணுத்திட்ட மானது தேச நலனுக்கானது இதை ஒரு போதும் நிறுத்த முடியாது அவ்வாறு நாட்டின் அணுத்திட் டத்தை நிறுத்தினால் பாதுகாப்பு ரீதி யில் நாடு பலம் குறைந்துவிடும் என்றார்.

பாகிஸ்தானின் அணுவாயுதம் தொடர்பான தொழில்நுட்பம் ஈரா னுக்கு வழங்கப்பட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு பாகிஸ்தானின் அணுவாயுதத் தயாரிப்புத் திட்டத் தின் தந்தையாக கருதப்படும் விஞ் ஞானி அப்துல்காதர்கானின் மீது விசாரணை நடத்தப்பட்டுள்ள நிலை யிலேயே முஷாரப் இவ்வாறு கூறி யுள்ளார்.

அணுவாயுதத் தொழில்நுட்ப கடத்தல் தொடர்பான குற்றச்சாட் டில் விஞ்ஞானி அப்துல்காதர் கானின் உதவியாளர் ஒருவருக்கு சம்பந்தம் இருப்பதாக சந்தேகம் வெளியிடப்பட் டுள்ளது.

அத்துடன் அப்துல் காதர்கானி டமும் அவருடன் தொடர்புடைய 7 பேரிடமும் தொடர்ந்தும் விசார ணைகள் நடத்தபபட்டு வருவதாக பாகஸ்தான் வெளியுறவுத் துறைச்செய் தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியாவைக் குறிவைத்தே பாகிஸ்தான் தனது அணுத்திட்டங்களை முன்னெடுத் துச் செல்வதற்காகவும் உடனடி யாக அந்த நாடு தனது அணுத்திட் டங்களைக் கைவிடவேண்டும் என்றும் இந்தியப்பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் அடிக்கடி வலி யுறுத்தி வருகின்றமை தெரிந்ததே. (து-2)

### பிலிப்பைன்ஸ் அரசு - தீவிரவாதிகள் அடுத்த மாதம் பேச்சு

(மணிலா)

பிலிபபைன்ஸ் அரசாங்கமும் முஸ் லீம் பிரிவினைவாதத் தலைவர்களும் மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் அடுத்த மாதம் பேச்சுவார்த்தை நடதத வுள்ளனர்.

பிலிப்பைனஸின் தென்பகுதியில இருக்கின்ற மின்ரானோவ் தீவில் 30 வருடங்களிற்கு மேலாக இடம் பெற்று வருகின்ற வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கி லேயே இந்தப் பேச்சுவார்த்தை நடை பெறவுள்ளது.

பிரிவினைவாதத் தலைவர்களுடன் புதிய சுற்றுப் பேச்சுவார்த்தைகளை விரிவாக நடத்துவதற்கு தமது அரசாங்கம் விரும்பியிருப்பதாக பிலப்பைன்ஸ் ஜனாதிபதி குளோ ரியா அரோயா தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸிற்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண டுள்ள மலேசிய பிரதமர் அப்துல்லா பதாபியுடன் மணிலாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பின்னரே பிலிப் பைன்ஸ் ஜனாதிபதி இதனைத் தெரி வித்துள்ளார். (து-2)



ரஷ்ய மக்களின் பாரம்பரிய வழக்கமான குளிர்ந்த நீரில் நீராடும் விழாவை அந்நாட்டு மக்கள் கொண்டாடி மகிழ்ந்தனர். தலைநகர் மொஸ்கோவில் உள்ள ஆற் றில் குளிக்கும் ஒரு ரஷ்ய அதிகாரி.

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

22

முதலாம் பகுதி

தேசவழமைச் சட்டம்

## யாழ்ப்பாண இராச்சியம்

· போர்த்துக்கேயரின் ஆட்சிக் காலத்தில் அரசாங்கம் ஐரோப்பியரையுஞ் சிங்களப் படைகளையுஞ் சேவையில் ஈடுபடுத்தியிருந்தது. ஆரம்ப காலத்தில் 250 போர்த்துக்கேயர் இராணுவத்திலே சேவை புரிந்தனர். காலப்போக்கில் அவர்களின் எண்ணிக்கை 200ஆகியது. அவர்களுக்குப் பக்க பலமாகச் சிங்களப் படைகளையும் வைத்திருந்தனர். சிங்களப் படைகளிலுள்ளவர்கள் இராசகாரியமாக இராணுவ சேவை புரிந்த லஸ்கோரிகளாவர். கண்டி மன்னனோடு தொடர்ச்சியான போர் ஏற்பட்டிருந்த காலத்திலே தென்னிலங்கையில் இருந்து படைகளை வரவழைத்துக்கொள்ள முடியவில்லை. எனவே, போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்திலே இராணுவ சேவை புரிவதற்கெனத் தென்னிந்தியர்களை வரவழைத்தனர். கி.பி. 1640இல் கிறிஸ்தோவான் திலேசு (**Christovao Telles**) என்பவனுடைய தலைமையில் 500 படையினரைத் தென்னிந்தியாவில் இருந்து வரவழைத்தனர். யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, மன்னார் ஆகியவிடங்களிலே பலமான கோட்டைகளை அமைத்து அவற்றைத் தமது பிரதானமான இராணுவ தளங்களாகப் போர்த்துக்கேயர் பயன்படுத்தினார்கள்.

உலாந்தாக்காரரின் ஆட்சியில் ஆரம்பத்திலே யாழ்ப்பாணப்பட்டினத்திலும் அதன் எல்லைப்புறங்களிலும் 408 ஐரோப்பியார்களும் 165 லஸ்கோரிப் படைகளும் இராணுவ சேவையில் ஈடுபட்டிருந்தனர். யாழ்ப்பாணத்துக்கோட்டையிலும் அதன் வெளிப் புறங்களிலும் 245 ஐரோப்பியர் தங்கியிருந்தனர். ஊர்காவற்றுறை, பருத்தித்துறை ஆகியவற்றிலே முறையே 32 பேரும் 19பேரும் நிலைகொண்டிருந்தனர்.10 படைவீரர் பொதுவாக வெளிநிலைகளிலே காவல் புரிந்தனர்; 28பேர் சிறிய தோணிகளிலே கடமைபுரிந்தனர். யாழ்ப்பாணத்துக் கோட்டைக்குள் 210 படையினர் நிலை கொண்டிருந்தனர். யாழ்ப்பாணத்திலே 7 ஆராச்சிகளின் தலைமையில் 165 லஸ்கோரிப்படையினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மன்னார், மாதோட்டம், அரிப்பு, கற்பிட்டி ஆகிய தலங்களில் எல்லாமாக 109 லஸ்கோரிப்படைகள் 5ஆராச்சிகளின் தலைமையிற் சேவை புரிந்தனர்.

1619 ஆம் ஆண்டிலே யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிப் போர்த்துக்கேயர் அதனை ஒரு கிளை இராச்சியமாகப் பிரகடனப்படுத்தினார்கள். போர்த்துக்கேய தளகர்த்தன் ஒருவனைக் (**Captain Major**) அதன் உயர் அதிகாரியாக நியமித்தனர். நிர்வாகப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கென்று திசாவையாகப் போர்த்துகேய அதிகாரி ஒருவனை அவர்கள் நியமித்தனர். இவர்கள் கொழும்பில் உள்ள தளபதியின் மேற்பார்வையின் கீழே செயல் புரிய வேண்டும். ஆயினும், நடைமுறையில் யாழ்ப்பாணத்தில் இருந்த அதிகாரிகள் கோவையில் உள்ள உயர் அதிகரிகளோடு, நேரடியாகத் தொடர்பு கொள்ளும் வழக்கத்தை ஏற்படுத்தியிருந்தனர். 1560 ஆம் ஆண்டிலிருந்து தனிப்பிரிவாகப் போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்டிருந்த மன்னார்ப் பிராந்தியம் 1640 இல் மீண்டும் யாழ்ப்பாணப்பட்டினத்தோடு இணைத்துக் கொள்ளப்பட்டது.

போர்த்துக்கேயரின் ஆட்சியில் முற்காலத்து நிர்வாக முறையும் நிர்வாகப்பதவிகளும் தொடர்ந்தும் நிலைபெற்று வந்தன குடிசனங்கள், நிலபுலங்கள், தொழில்துறைகள் முதலியன சம்பந்தமான விபரங்களைத் தோம்புகளில் எழுதும் வழக்கத்தைப் போர்த்துக்கேயர் ஏற்படுத்தினார்கள். தேசவழமையிலே அவர்களாற் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. பெற்றோர் தாம் விரும்பியவாறு முதுசொம், சீதனம் என்ற வகைக்குரிய சொத்துக்களைத் தங்கள் பெண்பிள்ளைகளைக் கலியாணம் முடித்து வைக்குஞ் சமயத்திலே அவர்களுக்குச் சீதனமாகக்கொடுக்கலாம் என்றவொரு புதிய ஏற்பாட்டைச் செய்தார்கள்.

உலாந்தாக்காரர் 1658 ஆம் வருடத்தில் யாழ்ப்பாணப்பட்டினம் என்னும் இராச்சியம் முழுவதையும் போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிவிட்டனர். இலங்கையில் அவர்கள் ஆட்சி புரிந்த காலத்தில் அவர்களின் வசமிருந்த மூன்று பெரும் பிரிவுகளில் ஒன்றாக அது விளங்கியது. கொம்மாந்தர் (**Commandeur**) என்னும் பதவிப்பெயர் கொண்ட படை.த்தலைவன் ஒருவனே அதன் உயர் அதிகாரியாக விளங்கினான். முழு இராச்சியத்தின் பாதுகாப்பிற்கும் நிர்வாகத்திற்கும் அவனே பொறுப்பாகவிருந்தான். இராச்சியத்தில் நிலை கொண்டிருந்த படைகளெல்லாம் அவனுடைய கட்டுப்பாட்டிலிருந்தன. இலங்கையில் உள்ள ஆட்சிக் குழுவில் (**Political Council**) அவன் அங்கத்தவனாய் இருந்தான். அதிலே தேசாதிபதிக்கு அடுத்த ஸ்தானம் அவனுக்குரியது என்பது குறிப்பிடற்குரிய ஒன்றாகும். தேசாதிபதி கூட்டத்திற்குச் சமூகமளிக்காதவிடத்து, அதற்குக் தலைமை தாங்கும் உரிமை யாழ்ப்பாணத்துக் கொம்மாந்தருக்குரியதாகும்.

கொம்மாந்தருக்கு அடுத்த மிக முக்கியமான பதவி திசாவை என்பதாகும். அப்பதவிக்கும் உலாந்தாக்காரரையே நியமிப்பது வழமை. கொம்மாந்தர் இல்லாத சமயங்களில் அவனுடைய கடமைகளையும் பொறுப்புகளையும் திசாவை கவனிக்கவேண்டும். திசாவையின் பொறுப்புகள், அதிகாரங்கள் என்பனபற்றித் தேசாதிபதி பான்கூன்ஸ் மேல்வருமாறு எழுதுகின்றார்:

" இந்தியாவுக்கு பொறுப்பான அதி உத்தம தேசாதிபதிகள் நாயகராலும் ஆலோசனைச் சபையினாலும் அங்கீகரிக்கப்பட்ட 1658ஆம் ஆண்டுக்கட்டளைகளின் பிரதிகளும் அவற்றுக்குப்பின் வெவ்வேறு சமயங்களிற் கொம்மாந்தருக்கு அனுப்பிய கட்டளைகளின் பிரதிகளும் திசாவைக்குக் கிடைக்கவேண்டும். அவற்றின் மூலமே தனது கடமைகள் சம்பந்தமான விடயங்களைப் பற்றி அவர் தெளிவாகவும் விபரமாகவும் அறிந்து கொள்ள முடியும்... பத்து பர்தாக்கள் அல்லது 25 கில்டர் பெறுமதிக்குக் குறைவானவை தொடர்பான சகலமான குடியியல் வழக்குகளிலும் தீர்ப்பளிப்பதற்குத் திசாவைக்கு அதிகாரமுண்டு. யாழ்ப்பாணத்திலே நீதித்தலத்தைச் சேர்ந்த ஒருவரோடும் குடியானவர்களில் மிக வயோதிபரான இருவரோடும் ஆலோசனை பண்ணிய பின்பே தீர்ப்புகளை வழங்க வேண்டும். மாதோட்டத்தில், அங்குள்ள அதிகாரியினதும் பட்டங்கட்டிமார் இருவரினதும் ஆலோசனைகளைப்பெற்ற பின்னரே தீர்ப்புகளை வழங்க வேண்டும். அதிக தொலையிலுள்ள ஊர்களாயின் அவற்றில் உள்ள மிக வயோதிபரான இருவரோடு தொடர்பு கொண்டு ,அவர்களின் அபிப்பிராயங்களை அறிந்து கொண்டபின்பே தீர்ப்பு வழங்க வேண்டும்.எண்பது(80) பணத்துக்கு மேலான பெறுமதியுள்ள விவகாரங்கள் தொடர்பான வழக்குகளிற் கொம்மாந்தருக்கு மேன்முறையீடு செய்வதற்கு அனுமதி கொடுக்கவேண்டும் .25 கில்டருக்கும் அதிகமான பெறுமதியுள்ள விவகாரங்களைப் பொறுத்தவரையில் தீர்ப்புகள் கொம்மாந்தரினாலும் நீதித்தலத்தினாலும் வழங்கப்பட வேண்டும்..."

(தொடரும்)

வலம்புரியின் அனுசரணையுடன்
வட்டுக்கோட்டை-சங்கரத்தை
பாலன் மில் உரிமையாளர்
இராசையா சோமசுந்தரம்
அவர்களின் ஞாபகார்த்தமாக நடாத்தப்படும்

கவிதைப் போட்டி -2004

1ம் பரிசு தங்கப் பதக்கம்
2ம் பரிசு வெள்ளிப் பதக்கம்
3ம் பரிசு வெண்கலப் பதக்கம்
இவை தவிர மேலும் பல ஆறுதல் பரிசுகள்

விடயம்
"தமிழா உனக்கேன் இக்கதி"

விதிகள்
- போட்டியாளர் ஒரு கவிதை மட்டுமே போட்டிக்கு அனுப்ப முடியும்.
- விடயத்தில் தரப்பட்ட தலைப்பை பிரதிபலிப்பதாக கவிதைகள் அமைய வேண்டும். (கவிதைக்குள் விடயத் தலைப்புவரி இடம்பெற வேண்டும் என்பது அவசியமில்லை)
- போட்டிக்கவிதை மரபுக் கவிதையாகவோ அன்றி புதுக் கவிதையாகவோ அமையலாம்.
- மரபுக் கவிதையாயின் 12 வரிகளை மட்டும் கொண்டதாகவும் புதுக்கவிதையாயின் 12 தொடக்கம் 16 வரிகளுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- கவிதைகள் யாவும் சொந்த ஆக்கமாக இருப்பதுடன், தெளிவாக எழுதப்பட வேண்டும்.
- கவிதை எழுதப்பட்ட தாளில் போட்டியாளர் தனது பெயரை எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- வயதெல்லை வரையறுக்கப்படவில்லை
- கவிதைப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் வலம்புரியில் வெளிவரும் கூப்பனையும் உறுதியுரையையும் நிரப்பி கவிதையுடன் இணைத்து அனுப்புதல் அவசியமாகும்.

உங்கள் கவிதைகளை
கவிதைப்போட்டி-2004
வலம்புரி
இல-15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு 31.01.2004ற்கும் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

★ பரிசுக்கான கவிதைகள் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படும்.

இங்கே வெட்டி கவிதையுடன் இணைத்து அனுப்புக.

இராசையா சோமசுந்தரம் ஞாபகார்த்த
கவிதைப்போட்டி- 2004 விண்ணப்பம்

அலுவலகப்பாவனைக்கு

முழுப்பெயர்.........................
.........................
தபால் முகவரி.........................
.........................
பிறந்த திகதி.........................
தே.அ.அ. இல .........................
மாணவராயின்/பாடசாலையின் பெயரைக் குறிப்பிடவும்.

.......... ..........................
திகதி போட்டியாளர் கையொப்பம்

உறுதியுரை
இத்துடன் அனுப்பப்படுகின்ற கவிதை எனது சொந்த ஆக்கம் என்றும் வேறு எந்தக்கவிதைகளின் தழுவலும் அல்ல என்றும். இப்போட்டிக்கு ஒரு கவிதையை மட்டுமே அனுப்பிவைக்கிறேன் என்றும் இத்தால் சத்தியம் செய்கிறேன்.

.............. ..........................
திகதி போட்டியாளர்கையொப்பம்

## தெற்காசிய தேசிய விமான சேவை

(கொழும்பு)

தெற்காசிய நாடுகளுக்கான தேசிய விமானசேவைகள் மற்றும் அதனை செயற்படுத்தலுக்கான பிராந்திய மட்டப் பயிற்சித்திட்டங்கள் என்பன ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஐரோப்பிய சங்கம் மற்றும் ஐரோப்பிய விமானக் கைத்தொழில நிறுவனம் என்பன இச் செயற்றிட்டங்களுக்காக 10 மில்லியன் யூரோக்களை ஒதுக்கியுள்ளது.

அடுத்துவரும் 3வருடங்களுக்கு இலங்கை உள்ளிட்ட 6நாடுகளுக்கு இச் செயற்றிட்டங்கள் மூலம் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

(தி-60)

# அழிவில் இருந்து நாட்டை மீட்பதே கூட்டு ஒப்பந்தத்தின் முக்கிய இலக்கு

## ஜே.வி.பி.பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா விளக்கம்

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைக்குத் தீர்வு கண்டு, நாட்டையும் மக்களையும் அழிவில் இருந்து மீட்பதே தமது முக்கிய நோக்கமென மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தம் குறித்து ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் இதுகுறித்துக் கருத்துக் கூறுகையில்,

தற்போதைய நெருக்கடியான கால கட்டத்தில் கொள்கையளவிலான மாற்றங்களுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் ஒரே குறிக்கோளுக்காகப் பயணம் செய்வது சிரமமான காரியமாகும்.

எனினும், நாம் மக்களுக்காக எத்தகைய கஷ்டங்களையும் எதிர்கொள்ளும் வகையில் கூட்டிணைந்துள்ளோம்.

இதன் மூலம் எதிர்த் தரப்பினரின் எதிர்பார்ப்புகள் தவிடு பொடியாகியுள்ளன என்றார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்,

பொதுத் தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் ஏனைய கூட்டு அரசியல் கட்சிகளும் இணைந்து பாரிய வெற்றியீட்ட முடியும்.

அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து உருவாக்கியுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள்ளே பிளவை ஏற்படுத்த ஐக்கியதேசியக் கட்சி பல்வேறு சதித்திட்டங்களைத் தீட்டி வருகின்றதாகவும் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரககட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான கூட்டு உடன்படிக்கை குறித்து ஐக்கியதேசிய முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர் சிலர் கருத்துத் வெளியிடுகையில்,

இக் கூட்டு ஒப்பந்தம் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை வீழ்ததித் தாங்கள் ஆட்சிக்கு வருவதற்காகச் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம். எவ்வாறாயினும் பொதுத தேர்தல் ஒன்று நடைபெறுமானால் அதில் வெற்றிபெறுவது ஐக்கிய தேசிய முன்னணியே என நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

(உ-61,10)

# மதமாற்றத் தடைச்சட்ட மூலத்தை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை

## தியவதனநிலமே மனக்கவலை

(கொழும்பு)

பாராளுமன்றம் திடீர் எனக் கலைக்கப்பட்டால் சட்டவிரோதமாக மக்களை மதம் மாற்றுவதற்கு எதிரான சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியாதுபோகுமென தியவதனநிலமே நிறைஞ்சன் விஜயரட்ண கவலை தெரிவித்துள்ளார்.

கலேவெல அவரையபபத்தன ரஜமகாவிகாரையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், மதமாற்றத் தடைச்சட்ட மூலத்தை 60 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமாப்பிப்பதாக அரசாங்கம் உறுதி அளித்துள்ளது. ஆனால், இச் சட்டமூலம் நிறைவேற்றப்படுவதைத் தடுப்பதற்கு சில அரசியல்வாதிகள் சதித்திட்டம் தீட்டி வருகின்றனர்.

நமது நாடடில் ஏற்கனவே அடிப்படைவாத யுத்தம் ஒன்று ஏற்பட்டு இருக்கின்றது.

இந்நிலையில் மதங்களுக்கு இடையேயும் யுத்தம் ஒன்று ஏற்படுமானால் எமது சமூகமே அழிந்து விடும்.

எனவே, இதுகுறித்து சிந்தித்து, மதங்களுக்கு இடையிலான மோதலை நிறுத்த கட்டமைப்பு ஒன்றை ஏறபடுத்த சம்பந்தப்பட்டவர்களும் அரசாங்கமும் முன்வர வேண்டும்.

அவ்வாறு மக்களுக்கிடையிலான மோதலை இவர்கள் தடுத்து நிறுத்த முன்வராது விட்டால், வடக்கு-கிழக்கில் ஏற்பட்டுள்ள யுத்தம் போல் தென்னிலங்கையிலும் மத யுத்தம் ஒன்று ஏற்பட்டு விடும். இறுதியில் நாடே அழிந்து விடும் என்று எச்சரித்துள்ளார்.

(உ-61,10)

## கற்கைநெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திறந்த பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு உயர்தொழில் ஆங்கிலம், ஆரம்ப ஆங்கிலம் மற்றும் அடிப்படை ஆங்கிலம் ஆகிய வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

(உ-18)

# தென்னாபிரிக்கா வசம் வெற்றிக்கிண்ணம்

## மேற்கிந்திய அணி மண் கவ்வியது

தென்னாபிரிக்காவுக்கு கிரிக்கெற் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான நான்காவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 10 விக்கெற்றுக்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை வெற்றி கொண்டுள்ளது.

இந்த வெற்றியை அடுத்து இப்போட்டித் தொடரை 3:0என்ற பெறுபேற்றுக்கு அமைய தென்னாபிரிக்க அணி தனதாக்கிக் கொண்டுள்ளது.

போட்டியின் 5வது நாளான நேற்று முன்தினம் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு 303 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்சைத் தொடர்ந்த மேற்கிந்தியத தீவுகள அணி 348ஓட்டங்களைப் பெற்று தனது சகல விக்கெற்றையும் இழந்தது.

தொடர்ந்து வெற்றிபெறுவதற்காக 46 ஓட்டங்களைப் பெறவேண்டிய தென்னாபிரிக்க அணியானது விக்கெற் இழப்பின்றி . வெற்றி இலக்கை அடைந்ததன் மூலம் 10 விக்கெற்றுக்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை வீழ்த்தி இருந்தது.

இதேவேளை, இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணியானது அதன் முதல் இன்னிங்சில் 6 விக்கெற் இழப்பிற்கு 604 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தனது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இதில் தென்னாபிரிக்க அணிக்காக சிறந்த முறையில் துடுப்பாடியிருந்த ஹேர்சல் கிப்ஸ் 192 ஓட்டங்களையும் இயென்ஸ்மித் 139 ஓட்டங்களையும் ஜக்கலிஸ் ஆட்டமிழககாது 130 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பில் சர்வான் 2விக்கெற்றுக்களைக் கைப்பற்றியிருந்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணியினர் தமது முதல் இன்னிங்சிற்காக சகல விக்கெற்றுக்களையும் இழந்து 301ஓட்டங்களை மட்டுமே பெற்றதனால் பலோன் நிலைக்குத் தள்ளப்பட்டதுடன் தொடர்ந்தும் இரண்டாவது இன்னிங்சிறகாகத் துடுப்பெடுத்தாடிய 348 ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றையும் இழந்தனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பில் முதலாவது இன்னிங்சில் கிறிஸ்ஹெயின் 77ஓட்டங்களையும சிவ்நாராயன் சந்திரபோஸ் 42ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்திருந்தனர். பந்து வீச்சில் நிறனி 5 விக்கெற்றுக்களையும், நில் 3 விக்கெற்றுக்களையும் கைப்பற்றி இருந்தனர்.

(உ-68)

# விளையாட்டுச் செய்திகள்

# இம்ரான் பத்தன் வீசிய பந்து வெமியூலனைப் பதம் பார்த்தது

இந்திய அணிக்கெதிராக அவுஸ்திரேலியாவின் பிறிஸ் போனில் நேற்று முன்தினம் நடைபெற்ற முத்தரப்பு ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டியின் போது சிம்பாவே அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மார்க் வெமியூலன் காயமடைந்துள்ளார்.

இந்தப் போட்டியில் சிறப்பான முறையில் துடுப்பாட்டத்தை மேற்கொண்டிருந்த போது இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளரான இப்ரான் பத்தன் வீசிய பந்து வெமியூலனின் நெற்றியில் பட்டதனாலேயே இவர் காயமடைந்தார்.

இதன் பின்னர் இடம்பெற்ற மருத்துவப் பரிசோதனையின்படி இவரது மண்டையோட்டில் பிளவு ஏற்பட்டிருப்பதாகவும், அதற்காக சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டியின் போது வெமியூலன கெல்மெட் அணிந்து விளையாடியிருந்தாலும், எசிறி வந்த பந்து இவரின் கண்புருவத்திற்கு மேலாக நெற்றியில் பட்டதனாலேயே இந்தக் காயம் ஏற்பட்டதெனக் கூறப்படுகின்றது.

கடந்த வருடம் நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டியின் போது பயிற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதும் வெமியூலன் இதே போன்று ஒருமுறை காயமடைந்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது தடவையாக வெமியூலனின் மண்டையோட்டுப் பகுதியில் காயமேற்பட்டிருப்பது அவரின் கிரிக்கெற் எதிர்காலத்தைப் பாதிக்கலாம் எனவும் கருதப்படுகின்றது.

தற்போது இவர் பிறிஸ்பேன் மருத்துவசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதுடன், சத்திரசிகிச்சைக்கு உட்பட்டு வருவதனால் இவ் மும்முனை போட்டித் தொடரில் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-68)

# சம நிலையில் திகழும் இந்திய, ஆஸி.அணிகள்

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் முத்தரப்பு ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் பிறிஸ் போனில் நடைபெற்ற சிம்பாவே அணிக்கெதிரான போட்டியில் இந்திய அணி 24 ஓட்டங்களால் வெற்றி பெற்றள்ளது.

இந்த வெற்றியை அடுத்து அவுஸ்திரேலிய, இந்திய அணிகள் தாம் விளையாடியுள்ள நான்கு போட்டிகளில் தலா மூன்று போட்டிகளில் வெற்றிபெற்று சமநிலையில் இருக்கின்றன. எனினும் சிம்பாவே அணி தாம் விளையாடிய நான்கு போட்டிகளிலும் தோல்வியடைந்துள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றதை அடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர் முடிவில் 6 விக்கெற் இழப்பிற்கு 255 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பில் ராகுல் ட்ராவிட் 84 ஓட்டங்களையும் யுவராஜ்சிங் 69 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத் தனர்.

பந்து வீச்சில் சிம்பாவே அணி சார்பில் சோன்ஹேர்வைன் 47ஓட்டங்களுக்கு 3விக்கெற்றுக்க ளையும் கீர்ஸ்ரிக் 48ஓட்டங்களுக்கு 2 விக்கெற்றுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணியினர் சிறப்பான ஆரம்பத் துடுப்பாட்டத்தின் மூலம் ஓட்டங்களைக் குவிக்கத் தொடங்கினர். எனினும், 14ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது சிம்பாவே அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான மார்க்கெமியூலன் இப்ரான் பத்தன் வீசிய பந்தில் நெற்றியில் காயமடைந்து வெளியேறியதை அடுத்து சிம்பாவே அணியின் இலக்குகள் சரியத் தொடங்கின.

இதனால் 47.1ஓவர் முடிவில் சிம்பாவே அணி தனது சகல விக்கெற்றுக்களையும் இழந்து 231 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டபோது 24ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணியிடம் தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டததில் சிம்பாவே அணி சார்பில் சோன் ஹேர்வைன் மற்றும் இப்ராகிம் ஆகியோர் தலா 39ஓட்டங்களையும், கிளான்.'.பிளவர் 36ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்திருந்தனர். பந்து வீச்சில் இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலி 55ஓட்டங்களுக்கு 3விக்கெற்றுக்களையும், பாலாஜி 32 ஓட்டங்களுக்கு 2விக்கெற்றுக்களையும் கைப்பற்றியிருந்தனர்.(உ-68)



அவுஸ்திரேலியாவின் மெல்பேன் நகரில் அந்நாட்டு கிரிக்கெற் வீரர் டேவிட் ஹுக்கை அடையாளம் தெரியாத ஒருவர் தாக்கியதில் அவர் கோமா நிலையை அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் பின்னர் அவர் நினைவு திரும்பாமலேயே கடந்த திங்கட்கிழமை உயிரிழந்தார்.

# 2004 புத்தாண்டுப் பலன்

**2004ஆம் ஆண்டில் பன்னிரு ராசிகளுக்கும் ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான பன்'னிரு மாத பலன்கள் தனித் தனியாகக் கணிக் கப்பட்டு இங்கு தரப்படுகிறது. பன்னிரு ராசிகளுக்குமான செப்ரெம்பர் மாதப் பலன் களின் தொடர்ச்சி.**

## மகரம்



**உத்தராடம் 2,3,4வது பாதங்கள்-திருவோணம் 4 பாதங்கள்-அவிட்டம் 1,2 பாதங்கள் வரை 9 பாதங்கள்**

நீங்கள் காரிய சாதனையைப் பெறுவீர்கள். குடும்பத்துப் பிரச்சினைகளில் சில சமயம் வாகனத்தை மாற்றி அமைத்தல் அல்லது அது வழி செலவுகளை எதிர்நோக்க வேண்டிவர்கள் நீங்கள். குடும்பத்தில் மூத்தவர்கள் அறிவுரை இப்போது தேவை. இந்த ராசி விவசாயிகள் இதர தனித்தொழில் உள்ளவர்களுக்குப் பணவரவு பழைய கணக்குகளை முடிபதாக இருக்கும். அலைச்சல் குறைந்து வருகின்றன. வெளிநாட்டுக் கடிதம் நல்ல தகவல்கள் கொண்டு வரும். பிரயாணம், ஸ்தல தரிசனமும் உண்டாகும் மாதம். ஆரோக்கியத்திற்கு கவலை இல்லை. அரசியல் வாதிகளுக்கு மிதமான போக்கு இருப்பதுடன் கௌரவச் செலவுகளும் கடுமையாக இருக்கும். எழுத்து மூலம் எதிர்பார்க்கும் அரசாங்க உத்தரவு தொழில் வகைக்கு திருப்தியாக வரவில்லை. சிக்கல் விட்டுவிட்டு இருக்கிறது. இதனால் உங்கள் வெளியூர் பிரயாணத்தைத் தள்ளிப்போடவும் வேண்டியிருக்கும். இது தொழில் ரீதியில் முக்கியம். தொழில் வகையில் பிடிப்பான சூழ்நிலையே தொடர்ந்து இருந்து வருகிறது. பணம் கொடுக்கவேண்டிய வகைக்கு வார்த்தையைக் காப்பாற்ற முடியவில்லை. இதனால் வழக்குச் சூழநிலையும் இருக்கிறது. குடும்ப வகையில் சொத்துப் பிரசசினையும் சிலருக்குக் குறிப்பாக மனைவி இல்லத்து மனவேற்றுமையும் உண்டாகும். உத்தியோகப் பிரிவினர்கள் பதவி உயர்வு எதிர்பார்க்கமுடியாது. பழைய பிரச்சினைகள், புதிய சிக்கலை உண்டாக்கும். எழுத்து உத்தரவு உங்களுக்கு எதிராகவும் அமையும். சில மாதம் ஓய்வு கொள்வதும் அவசியமாக இருப்பது உங்களை வெற்றியுடையவர்களாக ஆக்கும். வாகன வகையில் இருந்த சிக்கல் தீர்க்கப்பட்டுவிடும். வழக்கு மூலம் தாமதப்பட்ட காரியங்களும் வெகுவேகமாக செயல் முறைக்குக் கொண்டு வந்து விடலாம். சத்துருக்களாக இருந்தவர்கள் சமாதான முயற்சிக்கு வருவதால் உங்கள் எதிரியாக இருந்தவர்கள் ஏமாற்றம் அடைவர். உறவினர் சந்திப்பு, சுப விஷயப் பேச்சுக்கள் முக்கியத்துவம் கொடுக்கவேண்டியதாகும். இந்த மாதம் முழுவதும் நீங்கள் உங்கள் சொந்த வேலைகளை கவனிப்பது சிரமமாகும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு உயர்மட்ட மனிதர்களின் தொடர்பு நெருங்கியதாக இருக்கும். இந்த மாதத்தில் கடித அனுகூலம் கையெழுத்துப் போடும் வேலைகளும் அதிகமாக இருக்கும். இந்த மாதத்தில் ஆரோக்கியத்தைக் கவனிக்க வேண்டும். தொழில சம்பந்தமான ரகசியங்களைக் காப்பாற்ற வேண்டும். அயல் நாடடுக் கடிதத்தொடர்பு திருப்தியாகவே இருக்கிறது. கடன் உங்கள் கவனத்தைக் கவருவதாகத்தான் இருக்கிறது. கலைப் பிரிவினர்களுக்கு கவன மறதி, காலில காயம் உண்டாகுதல், மருத்துவச் செலவு உண்டாகும். போட்டி, பந்தயம், விளையாட்டு, றேஸ் போன்றவைகள் ஆதாயமாக இருக்கிறது. இனிமையான கனவுகள், எழுத்து நன்மை, ஒப்பந்தம் போன்றவையும் இருக்கின்றன. பெண்கள் தங்கள் வாழ்க்கை முறை அனுபவிக்கும் தன்மை இவற்றில் சிறப்புற்று விளங்குவர். நல்லுணவு சித்தி, நாகரிக வாகனம், சுகம், நல்லுறக்கம், பழம், பால் போன்ற ஆகார சேர்க்கையும் இருக்கும். மேலும் நல்ல தூக்கம் படுக்கை சுகத்தையும் அதிகமாக்குபவன் சனி. எப்படியும் இவ னால் நீங்கள் நன்மையை எதிர்பார்க்க முடியும். தொழில் வகை கொடுக்கல் வாங்கலில் பாதிப்பு, சற்று அலைச்சலையும் உண்டாக்கும்.

சிக்கல் என்பது தவிர்க்க முடியாதது. இது புது தம்பதிகள் கவனித்துச் செயற்படவேண்டும். உங்களுக்கு ஜனனகால திசாபுத்திகள் நன்றாக இருப்பின் பாராட்டத்தக்க பலன்கள் கிட்டும். வாகன சித்தி, வளமான பூமிப்பொருள் வாங்குவதும் உண்டாகும். கட்டிடச் செலவு, கலியாணச் செலவு போன்றவையும் நிகழக்கூடியதே. சிலர் மூதாதையர் பொருள இழந்ததை இப்போது கைப்பற்றுவர். சிலர் மணமில்லாதவர்களுக்கு திருமணம் முடிவது, குடும்பப் பொறுப்புகளை ஏற்பதும் உண்டாகும். குழந்தைகள் முன்னேற்றம் தேக ஆரோக்கிய விருத்தி, தூரத்துச் சந்தோசச் செய்தி அறிதலும் உண்டாகும் புது உடைகளும் பெண்களுக்கு நீலம், பச்சைக்கல் ஆபரணச் சேர்க்கையும் உண்டாகும். பழைய வாகனம் மாற்றி அமைத்தலும் உண்டாகும். போட்டி, பந்தயம், விளையாட்டு இவைகள் ஒரு சிறப்பிடத்தை உங்களுக்குக் கொடுக்கும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் குறிப்பிடத்தக்கது. தேர்வில் சந்தேகம் இன்றி வெற்றி உண்டு. உத்தியோகப் பரிவு ஆண், பெண்களுக்கு இந்த மாதம் நடுப்பகுதிவரையில் மனத்தெளிவான போக்கு முக்கிய மாற்றத்திற்கு முயற்சியும் உண்டாகும். வழக்கு பாதிக்காது. புத்திரர் புத்திரியர் கல்வி, தேக ஆரோக்கியம் இந்தவகை மனதிற்கு உவகை அளிப்பதாகவே இருக்கின்றன. நல்ல உறக்கமும் சித்திக்கும்.

யன், செவ்வாய் என்பது நன்மை இல்லை. கடந்தது என விடப்பட்ட வேலைகள் மீண்டும் தொடரும் அப்போது சில நண்பர்களை இழந்தீர்கள். இப்போது மீண்டும் அவர்களுடைய நட்பு தொடரும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வழிகளும் பிரகாசமடைய ஆரம்பித்து இருக்கின்றன. குடும்பத்திற்கு சில நாகரிகப் பொருள்வகையில் சேரும்காலம். புண்ணியஸ்தல பிரயாணம் உறவினர் சந்திப்பு போன்ற நன்மைகள் இருக்கின்றன. சுகம் அனுபவிப்பதில் தடை உண்டு சில சமயம் கால்நடையாக நடந்து செல்ல வேண்டியும் ஏற்படலாம். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும் கடன் வழக்கு வகையும் கட்டுப்பட்டுத்தான் இருக்கும். சுயதொழில் உள்ளவர்களின் கலைப் பிரிவினர்களுக்கு தான் சற்று வேகமான முன்னேற்றம் இருககிறது. காரணம் இந்த சனி, பெரிய மனிதர்கள், முக்கியஸ்தர்கள் உங்களைச் சந்திப்பார். சுக்கிரன் தான் இப்போது பணக்கொடுக்கல் வாங்கலைம் பண்போடு நடத்த உதவியாக இருக்கிறான். இந்த நேரத்தில் உங்கள் செய் தொழில் வழியை சீரமைத்துக் கொள்ளவும் நண்பர்களின் இயக்கத்தைக் கவனித்துக் கொள்ளுங்கள். அவர்கள் உங்களுக்கு எதிராகவும் செயற்படும் வாய்ப்பு இருக்கிறது. கடிதம் எழுதுவது பதில் பெறுவது .:.பையில்களை எச்சரிக்கையாக வைத்திருப்பதும் அவசியமாகும். இந்த வருடம் எத்தனையோ எதிர்ப்புகளுககு இடையில் ஓரளவு வளர்ந்தவர் அடுத்த ஆண்டுடில்தான் பெரும் முன்னேற்றத்திற்கு துணை. புதுமனை புகுவிழாவும் செய்வர். அரசியல் வாதிகள் நெருங்கிய தொடர்பு, மகிழ்ச்சி தருவதாக அமைந்திருக்கும். இப் பிரிவு விவசாயிகளுக்கு பெருமை தரும் காலமாகும். உபதொழில் வழியும் வெளிச்சம் பெற்று விட்டது. அரசாங்க உயர் மனிதர்கள் மூலம் பாராட்டுகளும் இருக்கும். விருந்திற்கு வேண்டி வெளியூர் போவதும் இருக்கும். வழக்குப் பாதிப்பு இல்லை. இயந்திரம் வாகனத் தொழில செயபவாகளுககு வரவு திருததியாக இருந் தாலும் 3-ல் சனி கடுமையான செலவுகளையும் உண்டாக்குவான் பழுது செலவுகள் அபாராமாக இருக்கும். பழைய வாகனம் கவர்ச்சிகரமான தன ஆதாயம் இருக்கிறது. ஆரோக்கியத்தில் கவலை இல்லை. கூட்டுத்தொழில் உள்ளவர்களுக்கு பாகஸ்தர்கள் இடையில் பிணக்கு உண்டாக வாய்ப்பு இருக்கிறது. குழந்தைகள் மனைவி இந்த வகையல் சிறு சிறு சச்சரவுகள் இடம்பெறும். தெய்வ வழிபாடு மன அமைதியை உண்டாக்கும் கலைத்துறையினர்கள் சில ஒப்பந்தம் எழுத்துவகையில எதிர்பார்க்கும் நன்மைகள் அப்படியே ஸ்தம்பித்து நிற்கும். இதற்கு நண்பர்களின் முட்டுக்கட்டையே காரணமாக இருக்கும். சில சமயம் இவை வழக்காகவும் உருவெடுக்கலாம். மேற்குத் திக்கு மனிதர்களின் வருகை பேச்சுவகையில் திருப்தியளிக்கும் உத்தியோகப் பிரிவினர்கள் தொழிலாளர்களுக்கு இது சோதனையான மாதமாகும். தேக உஷ்ண சௌக்கியம், மருத்துவச் செலவுகள் தவிர்க்க முடியாதவை.

# உங்களுக்கு எப்படி?

## மீனம்



**பூரட்டாதி 4வது பாதம்- உத்தரட்டாதி 4பாதங்கள்-ரேவதி 4பாதங்கள் வரை- 9 பாதங்கள்**

இப்போது உங்கள் ஏழாவது பார்வையில் குரு இருக்க மற்ற கிரகங்கள் மறைந்து விட்டன. சூரியனுக்கு ஆட்சி வீடு, உங்களுக்கு மறைந்த வீடாகும். சனி 4ல்தான் ஆரம்பமாகும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு எதிர்பாராத மாறறல் மனச்சலனத்தை உண்டாக்கும். எழுத்து மூலம் பாதிப்பு உண்டாகும் போட்டி, பந்தயம், சூதாட்டம் போன்ற ஈடுபாடும் அதன் மூலம் விரயமும் உண்டாகும் வெளிவட்டார மனிதர்கள் அனுகூலமாக இல்லை. குடும்பத்தில் குழப்பமான நிலை இருந்துகொண்டேதான் இருக்கும். கணவன், மனைவி இடையே காரணமற்ற கலகம் உருவாகும். வெளிவட்டார மனிதர்கள் அனுகூலமாக இல்லை. குடும்பத்திலும் குழப்பமான நிலை இருந்துகொண்டேதான் இருக்கும். கணவன், மனைவி இடையே காரணமற்ற கலகம் உருவாகும். குழந்தைகள் வகை மருத்துவச் செலவுகளும் சற்று கூடுதலாகவே இருக்கின்றன. பல் நோய், மூக்குப்பாதிப்பும் உண்டாகும். கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு அரசாங்க வகையினால் பாதிப்பு உடன் இருப்பவர்களால் அதிருப்தியான போக்கும் இருக்கும். உங்கள் நண்பர்களுக்கு உங்கள் உதவிதான் இப்போது தேவைப்படுகிறது. பழைய கணக்குகளை சரிபார்த்து ஆவன செய்யவும். போட்டி, பந்தயம் விளையாட்டு இவை ஆகாதவை. வெளியூர்ப்பிரயாணம் முக்கிய அங்கம் வகிக்கிறது. கணவன், மனைவி அல்லது அந்நிலையில் உள்ளவர்களுக்கு புது உடைகள் சித்தியும் உண்டாகும். நாகரிக வாகனம் உங்கள் கார் போன்றவற்றை விற்பதும் அவசியமாகும். குடும்பத்தில் மருந்து செலவுதான் கடுமையாக இருக்கிறது. புத்திரர், புத்திரியர்கள் கல்வி மந்தமாகவே இருக்கும். வழங்குக்கடன் வகையில் நீங்கள் குறைந்துவடவில்லை. அதன் மூலம் சலனமான நிலையும் இருக்கிறது. அகாலஉறக்கம் அகாலஉணவு கொள்வதும் உண்டாகும். இயந்திரத் தொழிலை விரிவுபடுத்துவீர்கள். கலைப் பிரிவு மனிதர்கள் தொழில் நிமிர்த்தம் அலைச்சல் உடையவர்கள். காலம் கடந்து உணவு உட்கொள்வீர்கள்.

## இடபம்



**கார்த்திகை 2,3,4வது பாதங்கள்-ரோகிணி 4 பாதங்கள்-மிருகசீரிடம் 1,2 பாதங்கள் வரை-9 பாதங்கள்**

இம் மாத ஆரம்பத்திலேயே சூரியன், குரு, செவ்வாய் உச்சம்பெற்ற புதனுடன் சேர்ந்தனர். ஆகவே இக்காலம் சில மாணவர்களுக்கு உல்லாசப் பிரயாணத்தையும் உண்டாக்கும். நீரில் எச்சரிக்கை தேவை. உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு உடன் இருக்கும் ஊழியர்களுடன் சில சமயம் கருத்து மோதல்கள் உண்டாகும். இப்படிப்பட்ட நேரத்தில் கூடுமானவரை அமைதியை கையாள்வது நன்மையாக இருக்கும். வாக்கு வாதத்திற்கு இடமளிக்க வேண்டாம். பொதுவாக இந்த ராசிக்குரிய அனைவருக்கும் வழக்கு சம்பந்தமான ஈடுபாடு நன்றாக இருக்காது என்பதால் அவ்வழி விலகி நிற்பது தான் நன்மை. கடன் விஷயம் கடைசியில் மனச் சலனப் போக்கை அதிகரிக்கச் செய்யும். அரசாங்க மனிதர்களிடமும் விலகி இருக்கவேண்டியிருக்கும். எவ்வளவு முயன்றாலும் விதி என்பது விடாது. இயந்திரக்கருவி, வாகனம் வாங்குவது போன்ற உயர் நன்மைகளை உடையவர்களாக

மேலும் நல்ல தூக்கம் படுக்கை சுகத்தையும் அதிகரிக்குபவன சனி. எப்படியும் இவ னால் நீங்கள் நன்மையை எதிர்பார்க்க முடியும். தொழில் வகை கொடுக்கல் வாங்கலில் பாதிப்பு, சற்று அலைச்சலையும் உண்டாக்கும்.

## கும்பம்



**அவிட்டம் 3,4வது பாதங்கள்-சதயம் 4பாதங்கள்-பூரட்டாதி 1,2,3 பாதங்கள் வரை 9 பாதங்கள்.**

பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமாக உறவினர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்படலாம். கடன் தொல்லைகள் ஓரளவு குறையும். அஜீரணம் போன்றவைகள் தலைதூக்கிவிடும். போட்டி, பந்தயங்களில் ஈடுபாடு குறைதது்க்கொள்வது நல்லது. மாணவ மாணவிகளுக்கு சாதாரண காலமாகும். பணவரவு இருக்கிறது. பழைய பேச்சுக்களை பேசுவதால் பாதிப்பு, ஆகாத காரியங்களுக்கு அலைந்து திரிதல், பிறரால் அவச்சொல்லும் உண்டாக்கும். சத்துருக்கள் விஷயத்தில் நீங்கள் சில வகையில் தாழ்ந்து போவது நல்லது. திட்டமிட்ட காரியங்கள் தவறிவிட்டபடியினால் உடன் இருப்பவர்கள் உங்களுக்கு பாதகமான சூழ்நிலையை உருவாக்குவர். இதனால் வெளியூர்ப்பிரயாணம் ஏற்பட்டாலும் வெட்டிச் செலவில்தான் முடியும். பழைய நண்பரைச்சந்திப்பதும் பாதக விளைவை உண்டாக்கும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு பதவி உயர்வு ஏதும் இல்லை. என்றாலும், கீழ்நிலை மனிதர்களால் உங்களுக்கு சிறு தொல்லைகள் இருக்கின்றன. ஜென்மத்துக் குரு தீமைகளைக் களைந்து விடும். உறவினர் வருகை அதிகமான செலவுகளை கொடுக்கத்தக்கதுதான். கலைத்தொழில் உள்ளவர்களுக்கு நடுப்பகுதிக்கு மேல் அடுத்தடுத்து பிரயாணமும் செலவும் இருக்கிறது. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு குறிப்பாக இது, உயர்வு அளிக்கும் காலம். அரசியல் வாதிகளுக்கு கௌரவமான காலமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும காலமே. மேலும் சனியின் தன்மை உங்களுக்கு எதிர்பாராத யோகத்தையும் உண்டாக்கக் கூடியதே. கணவன், மனைவி உறவில் இனிமையான போக்கும் எழுத்து ஒப்பந்தம் போன்ற வகையில் ஆதாயமும் இருக்கும். ஆகவே மேலே கண்ட நன்மைகளையும் அனுபவிக்கத்தான் செய்கிறீர்கள். குடும்பத்தில் விடவில்லை. அதன் மூலம் சலனமான நிலையும் இருக்கிறது. அகாலஉறக்கம் அகாலஉணவு கொள்வதும் உண்டாகும். இயந்திரத் தொழிலை விரிவுபடுத்துவீர்கள். கலைப் பிரிவு மனிதர்கள் தொழில் நிமிர்த்தம் அலைச்சல் உடையவர்கள். காலம் கடந்து உணவு உட்கொள்வீர்கள். குடும்பத்தில் பிணக்கு உடையவர்களாக இருப்பீர்கள். மாணவ, மாணவிகளுக்கு மனதை ஒருநிலைப்படுத்தும் காலம் அல்ல. எனவே மனதைச் சிதறவிடாமல் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும். நீங்கள் சினம்மிக்கவராக இருப்பதால் மற்றவர்களால் குறை கூறப்படுவீர்கள். குடும்பத்திலும் கூட கசப்பான வார்த்தைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். உறவினர்கள் மற்றும் விலகிஇருந்தவர்கள் இப்போது உபகாரமாக இருப்பர். சிலருக்கு செய்து வரும் தொழிலில் அரசாங்க மூலமாக பாதகமும் உண்டாகும். அவை கணக்கு இதர வகையிலும் இருக்கலாம். ஆண், பெண்களுக்கு எதிர்பார்த்த உத்தரவு அல்லது கணக்கு இதரவகையிலும் இருக்கலாம். மேலும் கடைசிப் பகுதியில் தொழில் நன்றாக இருக்கும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு எதிர்பார்த்த உத்தரவு அல்லது தகவல் கிடைக்கப்பெறும். குரு எப்படியிருந்தாலும் இப்போது பாவசார எல்லையைக் கடந்துவிட்டது. தொழில் வகையில் சில வேலைகள் இன்னும தாமதப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. தூரத்து மனிதர்களின் சந்திப்பு மன சாந்தியை மட்டும்தான் அழிக்கும். மலை வளம் சூழ்பிரதேச பிரயாணம் இருக்கம். இக்காலம் நடுப்பகுதியில் சந்தோஷம் உண்டாகும். தாய் வகை ஆரோக்கியம் பாதித்தல் மருத்துவச் செலவுகளும் குடும்பத்தில் இடம்பெறும். தொழில் கூட்டு மனிதர்களிடம் புதிய ஒப்பந்தம் உண்டாவது. குறிப்பாக நன்மையாகும். அரசியல் உயர்மடட்ட மனிதர்களின் சந்திப்பு பிரச்சினைகளை முடிக்கும் வாய்ப்பபை உண்டாக்கும்.

## பன்னிரு ராசிகளுக்குமான அக்டோபர் மாதப்பலன்

## மேடம்



**அச்சுவினி 4 பாதங்கள்-பரணி 4 பாதங்கள். கார்த்திகை முதல் பாதம் வரை-9 பாதங்கள்.**

இந்த மாதம் ஆரம்பத்திலேயே 6ல் மறைந்து கிரகங்கள் குரு, புதன், சூரி

தான் நன்மை. கடன் விஷயம் கடைசியில் மனச் சலனப் போக்கை அதிகரிக்கச் செய்யும். அரசாங்க மனிதர்களிடமும் விலகி இருக்கவேண்டியிருக்கும். எவ்வளவு முயன்றாலும் விதி என்பது விடாது. இயந்திரக்கருவி, வாகனம் வாங்குவது போன்ற உயர் நன்மைகளை உடையவர்களாக இருப்பீர். வருவாய் அதிகரித்து இருப்பதால், கடன் சுமையாக இருக்காது. குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்து காணப்படும். புத்திரர், புத்திரியர்கள் தேக ஆரோக்கியம், கல்வி உயர்வும் குறிப்பிடத்தக்கதாக இருக்கும் அரசியல் மனிதர்கள் மூலம் எதிர்பார்த்த அவசர உதவியை அரசாங்க உயர்மட்ட அதிகாரிகள் மூலமே முடிக்கப்பெறுவீர்கள். வெளியூர்ப்பிரயாணம் உடனுக்குடன் இருக்கும். இக்காலம் புண்ணியஸ்தல பிரயாணம் மேற்கொள்ள வேண்டியிருக்கும். போட்டி, பந்தயம், விளையாட்டு, லாட்டரி மூலமும் தனவரவு செய்யும் காலம் இது. உத்தியோகப்பிரிவினர்களுக்கு உகந்த காலமே. உயர்வான பலன்கள் ஆரம்பித்து விட்டன. என்றாலும் இக்காலமும் லாகாவில் திருப்தியான மாற்றங்களைச் செய்யக்கூடும் உயர்மட்ட அதிகாரிகள் உங்கள் விருப்பத்திற்கு கட்டுப்பட்டவர்களே. தொடர்ந்து வழக்கு மூலமாக அல்லது சொத்துவகைப் பிரச்சினை இருந்துகொண்டே இருக்கும். பழைய கடன் விஷயத்தில் கவனம் செலுத்தவும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு பழைய சூழ்நிலை தொடர்ந்து இருக்கத்தான் செய்யும். உங்கள் பண்புகளில் மற்றவர் குறைகூறவும் செய்வர். உடன இருப்பவர்களுடன் ஒரே சீரான போக்கு இருககாது. ஊர்ப் பயணம் தடையாகும். கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு பழைய எதிர்பார்த்த ஒப்பந்தம் கூடிவருவது கடைசி நேரத்தில் பாதிக்கக்கூடும். சனி அவன் தீமை செய்யான். கணவன், மனைவி உறவு சுமுகமாக இருக்கும். முக்கியஸ்தர்கள் சந்திப்பு கடிதத்தொடர்புகளும் மனதிற்கு இதமான போக்கை உண்டாக்கும். கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு அகால உறக்கம், அகால உணவு அலைச்சலும் இருக்கும். போட்டி, பந்தயம் விளையாட்டு போன்ற வகைகள் முழுத் திருப்தியளிக்காது. மாணவர்களுக்கு நனமைதரும் காலமே வழக்கு, கடன் விஷயங்கள் நிரப் பந்தம் தராது.

(தொடரும்)

சோதிடமேதை ராமன்

# காலாவதியான மருந்துப் பொருள் விற்பனை நிலையம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

காலாவதியான மருந்துப் பொருட்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து விற்பனை செய்துவந்த விற்பனை நிலையம் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

கடவத்தைப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, அங்கு சென்ற பொலிஸார் விற்பனை நிலையத்தை சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

இத் தேடுதல் நடவடிக்கையின் போது கண் தொடர்பான நோய்களுக்காக பயன்படுத்தப் பட்டுவரும் மருந்து வகைகள், காயங்களுக்கு பூசப்பட்டுவரும் களிம்பு வகைகள் என்பன மீட்கப் பட்டுள்ளன.

கடவத்தை ராகமப் பகுதிகளில் உள்ள இரு வீடுகளிலேயே இவ் மருந்துப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கடவத்தை எல்தெனியப் பிரதேசத்தில் கடந்த வாரம் ஒரு தொகுதி காலாவதியான மருந்துப் பொருட்கள் மீட்கப்பட்டதும் தெரிந்ததே.

இது தொடர்பாக நடமாடும் வைத்திய அதிகாரி ஒருவர் உட்பட 5சந்தேக நபர்களைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

(தி-60)

# பயிலுநர்களின் எண்ணிக்கை ஆயிரமாக அதிகரிக்கும்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபை, வட மாகாணத்தில் உள்வாங்கும் பயிலுநர்களின் எண்ணிக்கையை இவ்வாண்டு அதிகரிக்கவுள்ளது.

மேற்படி சபையானது கடந்த ஆண்டில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்ளைச் சேர்ந்த 550 பேரை உள்வாங்கியிருந்தபோதும் இவ் வருடம் இத்தொகை 1000 ஆக அதிகரிக் கப்படவுள்ளது

இதேவேளை, பயிலுநர்களாகத் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மாதாந்தம் 300 ரூபா ஊக்குவிப்புப் படியாக வழங்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

(உ-3)

## மயானம் புனரமைப்பு

நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் இருந்து வந்த சங்கரத்தை வழுக்கையாறு இந்து மயானம் தற்போது வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மயானத்தில் சேதமடைந்திருந்த மடம் புனரமைப்புச் செய்யப்பட்டிருப்பதுடன், உடல்கள் தகனம் செய்யப்படும் இடத்திற்கு அருகாக புதிய கொட்டகையொன்றும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-102)


## தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன்புரிச் சங்கம், சாவகச்சேரி

## 13வது வருடாந்தப் பொதுக்கூட்டம்-2004

மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 25.01.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு (இலங்கை நேரம்) நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் திரு. நா.தண்டாயுதபாணி அவர்கள் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக திரு.சி.வி. கே.சிவஞானம் முன்னாள் மாநகரசபை ஆணையாளர் அவர்கள் வருகை தரவுள்ளார். அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். கூட்டத்தில் கலந்துகொள்ளும் அங்கத்தவர்களுக்கு பஞ்சாங்கக் கலண்டர் இலவசமாக வழங்கப்படும்.

வைத்தியகலாநிதி
இ.கந்தையா, ஜே.பி.
செயலாளர்.

(C/7302)


## அரசாங்க அறிவித்தல்

### மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

2004 ஆம் ஆண்டுக்குரிய வாகனங்கள் சேவிஸ் செய்வதற்கான

# வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி

## அறிவித்தல்

### வளர்ப்பு நாய்களுக்கான விசர் நாய் தடுப்பூசி ஏற்றல்

வலி. கிழக்கு பிரதேச சபைப் பகுதியில் விசர்நோய் தடை மருந்து ஏற்றப்படவுள்ளது. மருந்து ஏற்றப்படவுள்ள நிலையங்கள், நேரம் பற்றிய விபரங்கள் வருமாறு:-

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 22.01.2004 | சென்மைக்கேல் ச.ச. நிலையம், உரும்பிராய் | -9.00 |
| | காந்திஜி ச.ச.நிலையம், உரும்பிராய் | -10.45 |
| | செல்லப்பா ச.ச.நிலையம், உரும்பிராய் | -1.00 |
| 23.01.2004 | ஞானவைரவர் ச.ச. நிலையம், உரும்பிராய் | -9.00 |
| | அண்ணா ச.ச.நிலையம், உரும்பிராய் | -10.45 |
| | உதய சூரியன் ச.ச.நிலையம், உரும்பிராய் | -1.00 |
| 26.01.2004 | ஸ்ரீசுப்பிரமணிய ச.ச. நிலையம், நீர்வேலி கந்தசுவாமி கோவிலடி | -9.00-11.00 |
| | பரமேஸ்வரி ச.ச.நிலையம் நீர்வேலி தெற்கு | -11.00-1.00 |
| | சிவசங்கர பண்டிதர் ச.ச.நிலையம், கரந்தன்வீதி, நீர்வேலி தெற்கு | -1.00 -3.00 |
| 27.01.2004 | இளைஞர் மத்திய ச.ச. நிலையம், நீர்வேலி மத்தி | -9.00-11.00 |
| | ஸ்ரீகணேசா ச.ச.நிலையம், அரசகேசரிப்பிள்ளையார் கோவிலடி, நீர்வேலி தெற்கு | -11.00-1.00 |
| | ராதை ச.ச.நிலையம், கம்பன்புலம் நீர்வேலி தெற்கு | -1.00 -3.00 |
| 28.01.2004 | சிவசக்தி ச.ச. நிலையம், பன்னாலை நீர்வேலி வடக்கு | -9.00-11.00 |
| | ஸ்ரீவிநாயகர் ச.ச.நிலையம் நீர்வேலி வடக்கு | -11.00-1.00 |
| | காமட்சியம்பாள் ச.ச.நிலையம், நீர்வேலி வடக்கு | - 1.00 -3.00 |
| 29.01.2004 | சுவர்னா ச.ச. நிலையம், மாலை, நீர்வேலி மேற்கு | -9.00-11.00 |
| | பாரதிதாசன் ச.ச.நிலையம் அலுமினியம் தொழிற்சாலைஅருகாமை, உரும்பிராய் கிழக்கு | -11.00-1.00 |
| | கலைவாணி ச.ச.நிலையம், கரந்தன் வீதி ஊரெழு கிழக்கு | -1.00 -3.00 |
| 30.01.2004 | முத்தமிழ் ச.ச.நிலையம், பொக்கணை, ஊரெழுமேற்கு | -9.00-11.00 |
| | பாரதி ச.ச.நிலையம் ஊரெழு மேற்கு | -11.00-1.00 |
| | சரஸ்வதி ச.ச.நிலையம், கொத்தியாலடி ஊரெழுமேற்கு | -1.00 -3.00 |
| 02.02.2004 | கலைவாணி ச.ச. நிலையம், பிள்ளையார் கோவிலடி, ஊரெழு | -9.00-11.00 |
| | வளர்பிறை ச.சநிலையம் கேணியடி, ஊரெழு கிழக்கு | -11.00-1.00 |
| | சர்வசக்தி ச.ச.நிலையம், ஆனந்த கானம், ஊரெழுமேற்கு | -1.00 -3.00 |

வலி.கிழக்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
நீர்வேலி
20.1.2004

க.வெங்கடாசலம்
செயலாளர்

(C/7301)

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 25 ஆயிரம் தமிழர்கள் தடுப்புக் காவலில்

## மனித உரிமைகள் சட்டத்தரணி பிரேம்நாத் தகவல்

(கொழும்பு)

அரசியல் எதிரிகளை அடக்கி

திரத் தன்மையை நீக்கி அவற்றின் செய்தி வெளியிடும் உரிமையைத்

வில் நீக்கப்படவேண்டும். அத்துடன் வெள்ளிவிழாக் காணும் இன்றைய

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

**2004 ஆம் ஆண்டுக்குரிய வாகனங்கள் சேவிஸ் செய்வதற்கான கேள்வி கோரல்**

யாழ். மாவட்ட செயலகத்திலுள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்கள் சேவிஸ் செய்வதற்கான கேள்வி கோரப்படுகின்றது. இது தொடர்பான நிபந்தனைகளையும் விண்ணப்பப் படிவத்தினையும் மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் அலுவலக நாட்களில் காலை 9.30 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும் மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம் என விலாசமிட்டு மேலுறையின் இடது பக்க மேல் மூலையில் வாகனங்கள் சேவிஸ் செய்வதற்கான கேள்வி விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலக கேள்விப்பெட்டியிலோ 2004.02.16 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பப்பட வேண்டும். அன்றைய தினம் பி.ப. 3.00 மணிக்கு கேள்விப் பத்திரப் பெட்டி திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

**வாகனங்கள் விபரம்**

- ★ பிக்கப்
- ★ வான்
- ★ கார்
- ★ மோட்டார் சைக்கிள்
- ★ லொறி
- ★ முச்சக்கரவண்டி (Auto)

அரசாங்க அதிபரும் மாவட்ட
செயலாளரும்
யாழ்ப்பாண மாவட்டம்

(C/7198)

## மனித உரிமைகள் சட்டத்தரணி பிரேம்நாத் தகவல்

(கொழும்பு)

அரசியல் எதிரிகளை அடக்கி ஒடுக்கவும் பழிவாங்கல் செயற்பாடுகளை மேற்கொள்ளவும் உறுதுணையாகவிருந்த பயங்கரவாதத் தடைச் சட்டம் தெளிவான வரையறைகளைக் கொண்டிருக்காத காரணத்தால் வெள்ளிவிழாக் காணும் இன்றைய காலகட்டம் வரையில் சுமார் 25 ஆயிரம் இளைஞர், யுவதிகள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும், அரசியல் கைதிகள் நிபந்தனைகள் இன்றி விடுதலை செய்யப்படவேண்டும் எனும் கோரிக்கைகளை வலியுறுத்தி அண்மையில் மட்டக்களப்பில் நடாத்தப்பட்ட கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையிலேயே மனித உரிமைகள் சட்டத்தரணி பிரேம்நாத் மேற்படி கருத்தைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இவ் வருடம் வெள்ளிவிழாக் காணும் பயங்கரவாதத் தடைச் சட்டம், "பயங்கரவாதம்" என்பதற்குத் தெளிவான வரைமுறைகளைக் கொண்டிருக்கவில்லை.

இவ்வாறான நிலையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்தி அரசியல் பழிவாங்கல்களும் எதிரிகளை அடக்கி ஒடுக்கும் செயற்பாடுகளும் பரவலாக மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன், ஊடகங்களின் சுதந்திரத் தன்மையை நீக்கி அவற்றின் செய்தி வெளியிடும் உரிமையைத் தடுக்கும் அதிகாரத்தையும் கொண்டுள்ள இப் பயங்கரவாதத் தடைச் சட்டமானது நாட்டில் சுதந்திரமாகக் கருத்தை வெளியிடவோ அன்றி அறியவோ தடைசெய்யும் வகையிலும் அமைந்துள்ளது.

எனவே இவ்வாறான பயங்கரவாதத் தடைச்சட்டமானது விரைவில் நீக்கப்படவேண்டும். அத்துடன் வெள்ளிவிழாக் காணும் இன்றைய காலகட்டம் வரையில் நாட்டில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சுமார் 25 ஆயிரத்திற்கும் அதிகமான அரசியல் கைதிகள் எதுவித நிபந்தனைகளும் இன்றி விரைவில் விடுதலை செய்யப்படவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

(உ-18)

## அத்தியாவசியப் பொருட்களின் வற் வரியை நீக்க அரசு முடிவு

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றுக்கான வற் வரியை நீக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய ஔடத அதிகார சபை உறுதிசெய்யும் மருந்துவகைகள், ஊனமுற்றோர் பாவிக்கும் வாகனங்கள், அம்புலன்ஸ் வண்டிகள், வைத்திய சேவைக்காக அறவிடப்படும் கட்டணங்கள் ஆகியவற்றுக்கான பெறுமதி சேர்க்கப்பட்ட வற் வரியே நீக்கப்படவுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட பொருட்களுக்காக இதுவரை 10 வீத வற் வரி அறவிடப்பட்டு வந்தது.

இது தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவித்த நிதி அமைச்சர் கே. என். சொக்ஸி,

இந்தப் பொருட்கள் யாவும் அத்தியாவசியமானவை என இனங்காணப்பட்டு வற் வரியை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெறுமதி சேர்க்கப்பட்ட வரித் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (தி-60)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி தேவஸ்தான தெற்கு வாசல் இராஜகோபுர மகாகும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு இணுவை தேவஸ்தான சிவஸ்ரீ உ.அபராஜிதக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-18)

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும் . - குறள்

**வலம்புரி**

## சொல்லும் செயலும் உடன்பட வேண்டும்!

இந்தியா என்றைக்கும் இலங்கைத் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான நாடல்ல. இலங்கையில் இடம் பெற்றுவரும் எந்தச் சமாதான முயற்சிகளையும் இந்தியா எதிர்க்காது. இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் மோகன்குமார் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியப் பணிக்குழுத் தலைவரைச் சந்தித்த போதே இந்தியத் தூதுவர் மோகன்குமார் மேற்கண்ட உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

இலங்கைத் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதில் இந்தியா ஒருபோதும் பின்னின்றதில்லை. இலங்கைத் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி விடுதலைப் புலிகளுக்கும் உதவுவதற்கு இந்தியா தயாராக இருக்கின்றது. ஆனால் இந்தியாவின் உதவியை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்வார்களா என்ற சந்தேகம் எமக்குண்டு என்றும் கூறியுள்ளார்.

இந்தயத் தூதுவர் மோகன்குமாரின் மேற்கண்ட வார்த்தைகளைக் கேட்கும் போது நெஞ்சில் பால் வார்த்தது போல் இருக்கின்றது.

எனினும் இந்தியத் தூதுவரின் வார்த்தைகள் இனிக்குமளவிற்கு இந்தியாவின் கடந்தகால நடவடிக்கைகள, இனிமையானவையாக அமையவில்லை.

அரசும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களை இந்தியாவில் ஆரம்பிப்பதற்கு விரும்பிய போதிலும் அதற்கு இந்தியா அனுமதிக்கவில்லை. அதேவேளை லண்டனில் தங்கியிருந்த விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்கும், சிகிச்சை பெறுவதற்கும் வசதியாக இந்தியாவில் தங்கயிருப்பதற்கு அனுமதி கேட்ட போது அதனையும் இந்தியா மறுத்திருந்தது.

ஏற்கனவே தனது நாட்டில் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பென்ற வகுதிக்குள் அடக்கி அவ்வமைப்பைத் தடை செய்த இந்தியா, அரசும்-புலிகளும் நோர்வேயின் அனுசரணையுடன் நடத்திய சமாதானப் பேச்சுக்களின் பயனாக இலங்கைக்கு உதவி வழங்கும் நோக்குடன் நோர்வேயில் கூட்டப்பட்ட மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்குபற்றுகிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அம் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளாமல் விட்டமையும் இங்கு கூர்ந்து நோக்குதற்குரியது.

இவ்வாறு இலங்கைத் தமிழர்களுக்கு-விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்யக் கூடிய பல்வேறு சந்தர்ப்பங்கள், சூழ்நிலைகள் கிடைத்த போதிலும் அதனை இந்தியா தட்டிக் கழித்து வந்ததுடன் சமாதான முயற்சிகளையும் பெரிதாக ஆதரிக்கவில்லை.

ஆக, இலங்கை இனவிவகாரத்தில் அமெரிக்கா தலையிடுவதைத் தடுக்கும் நோக்கிலேயே இந்தியாவின் கருத்துக்கள் தற்போது மாற்றமடைந்துள்ளன.

இந்தியாவின் பிரதமராக இருந்த ஐ.கே.குஜ்ரால் இலங்கைக்கு விஜயம் செய்த போது இலங்கை இன விவகாரத்தில் தலையிட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியா உதவுமா? எனப் பத்திரிகையாளர்கள் கேள்வியெழுப்பிய போது அதற்கு 'மீண்டுமொரு முறை நெருப்பில் கைவைக்க இந்தியா விரும்பவில்லை' எனக் குஜ்ரால் பதிலளித்திருந்தார்.

குஜ்ராலின் இப் பதில் 'இலங்கைத் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதில் நாம் ஒருபோதும் பின்னின்றதில்லை' என்ற இந்தியத் தூதுவரின் கருத்துடன் உடன்பாட்டைக் கொண்டிருக்கவில்லை.

இலங்கையின் இனவிவகாரத்தில் அமெரிக்கா உள்நுழைந்துவிட்டதென்ற அதிர்ச்சியில் விழித்துக் கொண்ட இந்தியா, இலங்கைக்குள் நுழைந்து பிராந்தியப் பாதுகாப்பைப் பலப்படுத்த முற்பட்டுள்ளது. இதற்காகப் பலாலி விமானத் தளத்தின் ஓடுபாதை, கடற்படைக்கான ஆயுதம், படையினருக்கான பயிற்சி என்ற வகையில் இலங்கை அரசுடன் சேர்ந்து தனது நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இந்தியாவின் இத்தகைய நடவடிக்கைகள் யாவும் சமாதானத்தைப் பாதிப்பதுடன், தமிழர்களுக்கெதிரானதாகவும் அமைந்துள்ளது.

இவ்வகையில் நோக்கும் போது இந்தியத் தூதுவரின் சொல்லும், இந்தியாவின் செயலும் ஒன்றுக்கொன்று முரண்பட்டுக் காணப்படுகிறது.

# சமாதானப் பேச்சுக்களின் போது முஸ்லிம், எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் கலந்துகொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும்

## அகாஷியிடம் ஹக்கீம் வலியுறுத்து



(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது தமிழீழ விடுதலைப்புலிகளும் அரசதரப்புப் பிரதிநிதிகளும் மட்டும் கலந்து கொள்ளாது முஸ்லிம்களும் மாற்று அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு இலங்கைக்கான ஜப்பானின் விஷேட தூதுவர் யசுசி அகாஷியிடம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கேட்போர் கூடத்தில் கட்சியின் அரசியல் அமைப்புக் குழுவினரை விசேட தூதுவர் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அமைச்சர் ஹக்கீம் இதனை வலியுறுத்தினார்.

இக் கலந்துரையாடலில், இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டும்.

கடந்த காலங்களில் நடைபெற்ற 6 சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்து கொள்ளவில்லை.

இது போலவே எதிர்க்கட்சியின் பிரதிநிதிகளையும் இச் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளச் செய்ய ஐக்கியதேசிய முன்னணி அரசு தவறிவிட்டது.

இக் காரணத்தாலேயே சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுததப்பட்டன. அத்துடன் அதனைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லமுடியாமலும் உள்ளது.



முன்னைய சமாதானப் பேச்சுவார்த்தைகளில் மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு பற்றிய கருத்துக்கள் குறித்து முககிய கவனம் செலுத்தப் பட்டன.

ஆனால் இனி நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப் படவுள்ளன. இதனால் பொதுஜன ஐக்கிய முன்னணியன் பிரதிநிதிகளும், முஸ்லிம் பிரதி நிதிகளும் இதில் பங்கு பறறுவது இன்றியமையாதது.

பேச்சுவார்த்தைகள் தடைப்பட்ட போதிலும் வெளிநாட்டு நிதியுதவிகள் வடக்கு-கிழக்கு அபிவிருத்திகளுக்குக் கிடைக்கும் சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

இந்நிதியுதவிகள் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் வாழும் அனைத்து இன மக்களினதும் நலன் கருதி நியாய முறையில் செலவிட்ப்படவேண்டம் என அமைச்சர் ஹக்கீம் அங்கு வலியுறுத்தினார்.

ஜப்பானின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷி இக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கும் போது, அமைச்சர் ஹக்கீம் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மக்களின் நிலைகுறித்து எனக்கு ஏற்கனவே தெளிவாக விளக்கியுள்ளார்.

நான் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்த போது அவர்களின் நிலைகுறித்து நேரில் சென்று பார்த்தேன் என்றார். (தி-61)

# மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியின் முதலாவது ஊடகவியலாளர் மாநாடு

(கொழும்பு)

மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியின் முதலாவது ஊடகவியலாளர் மாநாடு நேற்றுக்காலை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால ஸ்ரீசேன இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் நடைபெறும் முதலாவது ஊடகவியலாளர் மாநாடு இதுவாகும்.

மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியின் நிர்வாகசபை அடுத்தவாரம் தெரிவுசெய்யப்படவுள்ளது.

அத்துடன் இக் கட்சியின் முதலாவது மக்கள் பேரணி இம்மாதம் 29ஆம் திகதி கூடவுள்ளது.

இவவிரு கட்சிகளின் கூட்டமைப்பு வைபவங்களைக் கொண்டாடிய ஆதரவாளர்களை ஐக்கியதேசிய முன்னணி ஆதரவாளர்கள் தாக்கினர். இது குறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்துடன் இச் சம்பவங்கள் தொடர்பாகக் கடும் நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் ரில்வின் சில்வா கருத்துத் தெரிவிக்கையில்,

நாடு எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளில் இருந்து மக்களை மீட்டெடுப்பதே இக் கூட்டணியின் பிரதான நோக்கமாகும் என்றார். (தி-60)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை மு.ப.11.00மணிக்கு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் சகல உள்ளூர்த் திணைக்களத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், சமூக அமைப்புப் பிரதிநிதிகள் மற்றும் மின்சாரசபை, போக்கு வரத்துச் சபை, நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை பிரதிநிதிகள் ஆகியோரைத் தவறாது கலந்துகொள்ளுமாறு நெடுந்தீவு உதவி அரசாங்கஅதிபர் எஸ்.பேரானந்தன் கேட்டுள்ளார். (உ-18)




**சாயி அருளமுதம்**

பக்தன் இறைவனை நோக்கி விரைவதிலும் பார்க்க பக்தனை நோக்கி இறைவன் விரைந்து செல்கிறார். நீங்கள் அவரை நோக்கி ஓரடி எடுத்து வைத்தால் அவர் உங்களை நோக்கி நூறு அடி எடுத்து வைப்பார்! அவர் உங்கள் தாயிலும் தந்தையிலும் பார்க்க சிறந்தவராயிருப்பார். தம்மீது விசுவாசம் கொண்ட எத்தனையோ சாதுக்களைப் பேணிக் காப்பாற்றியது போல உங்களையும் உங்களினுள்ளேயிருந்து பேணிக்காப்பாற்றுவார்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை


## அமைதியும், சமாதானமும் நிலவின் சகல நலன்களும் கிட்டும்

### சுவாமி சித்ரூபானந்தா அருளுரை

(பருத்தித்துறை)

மனிதனுக்கு அமைதியும் சமாதானமுமே இன்று முக்கியமானவை. அமைதியும் சமாதானமும் நிலவும் போதுதான் மனிதன் சகல நலன்களையும் பெற்றுக்கொள்ளமுடியும் தூய அன்னை சாரதா யுகத்திலே 2004ஆம் ஆண்டு மக்களுக்கு அமைதயும் சமாதானமும் கிடைக்கும் என்பது பூரண நம்பிக்கையாகும்.

மேற்கண்டவாறு பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவிலே உரையாற்றிய சுவாமி சித்ரூபானந்தா குறிப்பிட்டார்.

சுவாமி சித்ரூபானந்தா அங்கு தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது,

தமிழ் மக்கள் மத்தியிலே தைப்பொங்கல் மிக விசேடமாகக் கொண்டாடப்படுகின்றது. தை பிறந்தால் வழி பிறக்கும் என நம்பிக்கை கொண்டுள்ள எம் மக்கள் வாழ்வில் என்றும் உயர்வைத் தவருவது இத் தைப்பொங்கல் விழாவாகும்.

பானை, அரிசி, பருப்பு, சர்க்கரையாவும் எம்மிடம் இருந்தாலும் நெருப்பு இல்லாவிட்டால் எதுவும் நடைபெறாது. இவ் வெப்பசக்தி எமது வாழ்க்கைக்கு மிக இன்றியமையாதது. எனவேதான் வெப்பத்தை எமக்கு வழங்கும் சூரியனுக்கு பொங்கல், பூசைகள் நடைபெறுகின்றன. சூரியன் தோன்றத் தவறினால் உயிரினங்கள் அனைததினதும் வாழ்வு தடைப்பட்டு விடும். தமிழர்களின் இறைவழிபாட்டுத் தன்மை மிகச் சிறப்பு வாய்ந்ததாகும்.

தைப்பொங்கல் நாளிலே இன்பமும் மகிழ்ச்சியும் தோன்றினால் ஆண்டு முழுவதும் அமைதியும் சந்தோஷமும் ஏற்பட்டு சிறந்த வாழ்க்கை வாழலாம் என்பது எமது நம்பிக்கையாகும் சூரியனுக்கு நன்றிக்கடன் செலுத்தும் இந் நன்னாளில் மிக மகிழ்ச்சியுடன் புதிய வாழ்வுக்கு வழிவகுக்க வேண்டும் என்றார்.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி மலர்விழி அசோகலிங்கம் அங்கு உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது,

போற்றுதற்குரிய இத் தைத்திருநாள் குடும்ப உறவைப் பலப்படுத்துவதிலும் அயலவர் நேசத்தை ஏற்படுத்துவதிலும் ஒற்றுமையை ஓங்கச் செய்வதிலும் மன நிறைவை உருவாக்குவதிலும் அன்பு, அறம், அகிம்சை, நன்றியுணர்வு, பகிர்ந்துண்ணல் ஆகிய மரபுவழி விழுமியக் கருத்துக்களையும் ஏற்படுத்துவதிலும் முக்கியத்துவம் பெறுகின்றது எனக் குறிப்பிட்டார். (உ-52)

# எனது முன் அனுமதியில்லாது எம்.பிக்கள் உரையாற்றக் கூடாது

## பொ.ஐ.மு எம்பிக்களுக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

வேறுகட்சிகளால் நடாத்தப்படுகின்ற கூட்டங்களில் தன்னுடையதோ அல்லது பொ.ஐ.மு.பொதுச் செயலாளருடையதோ அனுமதி இன்றி உரையாடக் கூடாது என பொ.ஐ.மு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி அறிவித்திருக்கிறார்.

பொ.ஐ.மு எம்பிக்களை கடந்த திங்கள் அன்று தனது வாசஸ் தலத்தில் சந்தித்த போது ஜனாதிபதி இவ்வாறு அறிவுறுத்தி இருப்பதாக பொ.ஐ.முவின் பொதுச்செயலாளர் டி.எம்.ஜெயரட்ணா தெரிவித்தார். ஏனைய கட்சிகளால் ஒழுங்கு செய்யப்படும் பொதுக் கூட்டங்களில் பொ.ஐ.மு எம்பிக்கள் உரையாற்றுவதால் பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன.

விசேடமாக இத்தகைய உரைகள் தமிழ் சமூகத்தவர் மத்தியில் அச்ச உணர்வை தோற்றிவிப்பதாக உள்ளன. இதனால் எம்பிக்கள் உரையாற்றுவதாயின் அனுமதி பெறவேண்டுமென ஜனாதிபதி கடும் உத்தரவு பிறப்பித்து இருக்கிறார்.

இதேவேளை பொதுத்தேர்தலை நடத்தவேண்டுமென ஜே.வி.பி தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் மாகாண சபைத்தேர்தலுக்கு தயாராகுமாறு ஜனாதிபதி பொ.ஐ.மு எம்பிக்களுக்கு அறிவித்துள்ளார். (த-6)

# நோர்வேயில் இருந்து வந்தவர் விபத்தில் சிக்கி மரணம்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி மண்டான் பகுதியில் கீறோகொண்டா மோட்டார் சைக்கிள் நாய் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிர் இழந்தார்.

நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றது. சம்பவத்தில் 4 பிள்ளைகளின் தந்தையான சின்னத்தம்பி செல்லத்துரை (வயது 55) என்பவரே உயிரிழந்தவராவார்.

குடும்பமாக நோர்வேயில் வசித்து வந்த பிரஸ்தாப நபர் தனது உறவினர்களை பார்ப்பதற் காக யாழ்ப்பாணத்திற்கு வந்திருந் தார் என்றும் நேற்றைய தினம் நோர்வேக்கு திரும்பவிருந்தார் என்றும் கூறப்பட்டது.

சடலத்தை நோர்வேக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன. (த-7.1)

# ஜப்பான் தூதுவர் அகாஷியுடன் கூட்டமைப்பினர் சந்திப்பு

(கொழும்பு)

தமிழத் தேசியக் கூட்டமைப்பு எம்பிக்கள் ஜப்பான் விசேட தூதுவர் யசூசி அகாஷியை நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

அதிகாரப் பரவலாக்கலை விரும்பாத ஜே.வி.பியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி செய்துகொண்ட ஒப்பந்தமானது தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு பாரிய முட்டுக் கட்டையாக அமையவுள்ளது.

அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கத்துடனேயே இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது.

சுதந்திரக்கட்சி ஜே.வி.பி ஒப்பந்தம் எதனையும் தமிழ் மக்களுக்கு கொடுக்கப்போவதில்லை என்றும் கூட்டமைப்பு எம்பிக்கள் யசூசி அகாஷியிடம் தெரிவித்துள்ளனர். (வ)


# வாடகைக்கு தேவை

மருதனார்மடத்துக்கும் மல்லாகத்திற்கும் இடைப்பட்ட K.K.S பிரதான வீதியில் போரூட் நிறுவனத்திற்கு காரியாலயம் நடாத்த சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. கீழ்க் காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**திட்ட முகாமையாளர்,**
**போரூட்,**
**67, கோவில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C /7200)





# SISTER MEERA'S PROGRAMMES IN JAFFNA

23-01-2004 9.00AM-10AM HINDU LADIES COLLEGE STUDENT "BENEFITS OF MEDITATION"
தியானத்தின் பயன்கள்

23-01-2004 10.30AM-11.30AM RAMANATHAN LADIES COLLEGE STUDENTS "MEDITATION FOR CONCENTRATION"
மனோ ஒருமைப்பாட்டிற்கான தியானம்

23-01-2004 12.00-1.00 PM KOPAY TRAINING COLLEGE TEACHERS "VALUES"
விழுமியங்கள்

23-01-2004 4.00PM. MEETING THE DIRECTOR OF THE TEACHING HOSPITAL OF JAFFNA
5.00PM VISTING THE PATIONT'S IN WARDS

24-01-2004 9.30AM-11.30AM PUBLIC TALK AT JAFFNA HINDU COLLEGE KUMARASAMY HALL "EMPOWERING FOR PEACE"
சமாதானத்தை வலுப்படுத்துதல்

24-01-2004 4.30PM-5.30PM NAWALAR HALL NAWALAR ROAD JAFFNA "STRESS MANAGEMENT AND TIME MANAGEMENT"
மன அழுத்தத்தையும் நேரத்தையும் நிர்வகித்தல்

BRAHMA KUMARIS WORLD SPIRITUAL UNIVERSITY-RAJASTHAN

*JAFFNA BRANCH: KACHERI NALLUR ROAD,JAFFNA*

[C/7195]


## மணிவண்ணனைப் பார்க்க சென்றவரின் சைக்கிள் அபேஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த தென்னிந்தியத் திரைப்பட நடிகர் மணிவண்ணனைப் பார்ப்பதற்காகச் சென்றவர் தனது 6 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிளைப் பறிகொடுத்தார்.

இச்சம்பவம் நேற்று மாலை 3.30 மணியளவில் ரில்கோ விடுதிக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

மணிவண்ணனைப் பார்க்கும் ஆவலில் கைக்கிளைப் பூட்டாது சென்ற போதே கைக்கிள் களவாடப்பட்டுள்ளது. (த-7.1)

## நடிகர்...

வியலைத் தத்ரூபமாகச் சித்திரிக்கும் வகையில் காட்சிகளை நெறிப்படுத்தவுள்ளதாகவும், அக் காட்சிகளில் குடாநாட்டு நடிகர்களைப் பங்கு கொள்ளச் செய்யவுள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை நேற்றைய தினம நயினாதீவுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்ட மணிவண்ணன் இன்று காலை கொழும்புக்குச் செல்கிறார்.

நடிகர் மணிவண்ணனை ரில்கோ ஹோட்டல் உரிமையாளர் ரி.திலகராஜ் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்திருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (த)

## ஸ்ரீ.சு.கட்சி..

முரண்பாடுகள் காணப்பட்டு வந்துள்ளது.

இத்தகைய கருத்து முரண்பாடுகளே நாட்டை மீண்டுமொரு யுத்தத்திற்கு இட்டுச் செல்லக் கூடியதாக அமைந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று ஏற்றுக் கொள்ளாத எந்தவொரு தரப்பினருடனும் சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகள் ஈடுபடமாட்டார்கள் என்றும் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.(ம)

# அமைச்சர் சந்திரசேகரன் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

## நாளை வன்னியில் இடம் பெறும்

(கொழும்பு)

மலையக மக்களின் முன்னணி தலைவரும் சமூகப் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான பெ.சந்திரசேகரன் நாளை வெள்ளிக்கிழமை வன்னிக்கு விஜயம் செய்து அங்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்து தற்போதைய அரசியல் நிலைபற்றிப் பேசவுள்ளார்.

மேற்படிச் சந்திப்பின் போது தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து உருவாக்கிய கூட்டணி குறித்தும் இனிவரும் காலத்தில் நடாத்தப்படவுள்ள தேர்தல் மற்றும் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது உட்பட மற்றும் பல முக்கிய விடயங்கள் குறித்தும் கலந்துரையாடவுள்ளதாகதெரிவிக்கப் படுகிறது.

அத்துடன் இச் சந்திப்பின் பின்னர் அனைத்து தமிழ் கட்சிகளையும் சந்தித்து மேற்படி விடயங்கள் குறித்து விரிவாகப் பேச்சுவார்த்தை ஒன்றை நடாத்த அமைச்சர் சந்திரசேகரன் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. (உ-18)

## ஆசிரியர்களுக்கு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த 1998 ஆம் ஆண்டிற்குப் பின் நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கான ஒரு நாள் செயலமர்வு நாளை மறுதினர் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு [illegible] இராமநாதன கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர்களுக்கான உரிமைகள், கடமைகள், ஓய்வூதியம். விசேட கொடுப்பனவுகள், லீவு விபரங்கள் உள்ளிட்டதாக செயலமர்வு நடைபெறும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ். மாவட்டச் செயலாளர் க.குமாரசாமி தெரிவித்துள்ளார். (ச)

## மீண்டுமொரு...

யாழ்ப்பாணத்தில் வாழுகின்ற தமிழ் மக்கள் அனைவரும் சமாதானத்தை விரும்புகிறார்கள். அரசாங்கம் மீண்டும் ஒரு யுத்தத்தை ஆரம்பிக்க மாட்டாது என்றும் தளபதி உறுதிபடக் கூறினார்.

இக் கலந்துரையாடலில் முன்னாள் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்கருணாரட்ணா மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ம)

## செயற்திட்ட கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

2004ஆம் ஆண்டிற்கான செயற் திட்டங்கள் தொடர்பாக ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தினால் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன.

இதன்படி சாவகச்சேரி சுகாதாரப் பணிமனை, சாவகச்சேரி நகர சபை, சாவகச்சேரி பிரதேச சபை, தென் மராட்சி கல்வி வலயம் ஆகியவற்றில் இன்றும் நாளையும் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன. (த-51)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மழை நீரைக் குடிநீராக மாற்றிப் பயன்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பில் ஆலோசனைகளை வழங்க கொழும்பில் இருந்து ஆளணியினர் வருகை தர இருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## யாழ்.தளபதி...

விடுதலைப்புலிகளுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இக்கடிதத்துக்கு பதிலளித்து கடந்த ஞாயிற்றுக் கிழமை கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு விடுதலைப்புலிகளால் கடிதம் அனுப்பப்பட்டது.

அக் கடிதத்தில் இராணுவத் தளபதிக்கு விடுதலைப்புலிகள் அச்சுறுத்தல் எதுவும் விடுக்கவில்லை. புரிந்துணர்வு உடன்படிக்கையைக் கடைப்பிடித்து அதன்படி விடுதலைப்புலிகள் செயற்படுகிறார்கள். அதேவேளை இராணுவத்தளபதிக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்க வேண்டிய தேவை தமக்கு இல்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அக் கடிதத்தின் பிரதி அன்றைய தினமே யாழ்.மாவட்ட கண்காணிப்புக்குழு அலுவலகத்தினால் இராணுவத்தளபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (த-6)

# மட்டு.மாவட்டத்தில்...

பெ.சந்திரசேகரன், இ.சந்திரநேரு எம்பி, மேல்மாகாண மலையக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கனேசன், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், கே.சிவாஜிலிங்கம், ஜி.கிருஷ்ணபிள்ளை எம்பி, பிரதமரின் ஊடகச் செயலாளர் சமன் அத்தாவுட ஹெட்டி, பிரதமரின் மேலதிக செயலாளர் பத்மநாதன், கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் அலிசாகீர் மௌலானா, மற்றும் மட்டு-அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ், கிழக்குப் பிராந்திய மகளிர் படையணித் தளபதி நிலாவினி, பிராந்திய மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரேமினி ஆகியோர் பங்கேற்றனர்.

அங்கு உரையாற்றிய சிறப்புத் தளபதி ரமேஷ் கடந்த ஒரு வருட காலத்துக்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்டம் 'வீரம் விளைந்த மண்' என்ற வாசகம் கொண்ட பதாகை அகற்றப்பட்டது.

ஆனால் இந்த மக்கள் மானம், வீரம், பொருந்தியவர்கள். இவர்களிடம் இருந்து மானத்தையும், வீரத்தையும் பிரித்துப் பார்க்க முடியாது என்பதை இன்றைய நிகழ்வு சர்வதேசத்திற்கு பறைசாற்றியுள்ளது.

எமது விடுதலைப் போராட்டம் புத்திஜீவிகள் கைக்குச் சென்றிருக்கிறது என்பதற்கு இன்றைய நிகழ்வு நல்லசான்றாதாரம்.

ஆயுதப் போர் இன்று ஓய்ந்து விட்டது.சமாதான வழிமுறையை நாம் நாடி நிற்கிறோம். எமது மக்களை பயங்கரவாதிகளாக உற்று நோக்கிய சர்வதேச நாடுகள் எமது போராட்டத்தின் நியாயத்தன்மையைப் புரிந்துகொண்டு இன்று எம்மை, எமது போராட்டத்தை அங்கீகரிக்கும் நிலைக்கு வந்துள்ளன.

எமது தலைவர் தீர்க்கமும், தீர்க்க தரிசனமும் மிக்கதோர் உறுதிமிக்க மனிதர். எமது உரிமைகளை பெறும் விடயத்தில் அவரது உறுதி என்றும் தளராது.

நாம் சமாதான வழிமுறைக்கு வந்ததையிட்டு சிங்கள அரசு தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது. நாம் மிகுந்த படைபலத்துடனும் உறுதியுடனும் உள்ள நிலையிலேயே பேச்சு வார்த்தை மேசையில் அமர்ந்தோம்.

எம்மை பயங்கரவாதிகள் என வர்ணித்து தடைசெய்த உலக நாடுகள், புலிகளும் தமிழரும் பிரிக்க முடியாத சக்தி என்பதை புரிந்து கொண்டுவிட்டன

விடுதலைப்புலிகள் மீது விதித்த தடையை நீக்க வேண்டும் என்பதற்காக சம்மந்தப்பட்ட நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டியவர்கள் எமது தமிழ் மக்களே.

தற்போது பேச்சு ஓய்துள்ள நிலையில் பலதரப்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. யுத்தம் தொடங்குமா? போர் வெடிக்குமா? என்ற அச்சத்தில் மக்கள் வாழ்கின்றனர்.

தெற்கில் குளறுபடி அரசு பல்வேறு குத்துக்கரணங்ளை அடித்து வருவதே இதற்கு காரணம். ஆட்சி அதிகாரம் எமக்குத் வேை யில்லை உரிமை, விடுதலை இவையே எமது குறிக்கோள்.

இதைப்புரிந்து கொள்ளாது எம் மீது மீண்டும் யுத்தத்தை திணிக்க முயன்றால் விளைவு பாரதூரமானதாக இருக்கும்.

தமிழர் முஸ்லிம்கள் என்ற பேதத்தை இனவாதமிக்க முஸ்லிம் தலைமைகள் சிலவே வளர்த்து வருகின்றன. எம்மிடையே என்றும் பேதம் இருக்கக் கூடாது. நாம் ஒரே குடும்பம் எம்மிடையே பிரச்சினையைத் தோற்றுவித்த இனவாதிகளின் கைகளில் சிக்கியுள்ள முஸ்லிம் தலைவர்கள் சிலர் வேண்டாத புரளிகளை கிளப்பி விடுகின் றனர்.

எமது போராட்டத்தை பலவீனப்படுத்துவதே இவர்களின் நோக்கமாகும். யுத்தத்தில் நம்பிக்கை உள்ள வர்களின் கட்டுக் கதைகளை நம்பி மக்கள் ஏமாறக் கூடாது என்றார். (உ)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.01.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.